

*Sri Anandamayi Ma*

# மாத்ரு தரிசனம்

ஸ்ரீ ஸ்ரீ மா ஆனந்தமயி அவர்களின்
வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

**நூலாசிரியர்: பாய்ஜி அவர்கள்**

**தமிழாக்கம்: ஓர் அடியார்**

# முன்னுரை

ஸ்ரீ ஜோதிஷ் சந்திர ரே என்னும் இப்புத்தக ஆசிரியர் பொதுவில் "Bhaiji" அதாவது "அண்ணா" என்று ஸ்ரீஸ்ரீ மா ஆனந்தமயி அவர்களின் பக்தர்களால் மிக்க நேசத்துடன் மதிக்கப்பட்டார். பெருந்தன்மையான சீலமும், முழுமையான எளிமையையும், காணற்கரிய தொண்டுணர்வும் கொண்டு கண்டோரெல்லோரது உள்ளங்களையும் கவர்ந்திழுத் தமையால் உண்மையில் இவரை "**அடியார்களுள் ஓர் இளவரசன்**" என்றால் அது முற்றிலும் சரியேயாகும். வியக்கத்தகு உள்ளத் தூய்மையாலும், தன்முனைப்பற்றத் தன்மையாலும், அதாவது, அகந்தையற்ற சுபாவத்தாலும் ஆழ்ந்த நுண்ணறிவு பெற்றதால் அவ்வப்போது ஸ்ரீஸ்ரீ மா அவர்களின் சூக்ஷ்ம தரிசனத்தைக் காணும் தகுதியை அவர் பெற்றார். மிக உயரிய அளவில் புரிந்து கொள்ளும் அறிவுத் திறன் கொண்ட இந்நூலாசிரியருக்கு ஸ்ரீமா ஆனந்தமயி அருளிய பெரிய அல்லது சிறிய அளவிலோ அருளாசியுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டதே இவர் எழுதிய 'மாத்ரு தரிசனம்' என்ற இந்நூல்! விலை மதிப்பில்லாத ரத்தினமாக எல்லோராலும் இந்நூல் போற்றப்பட்டதற்குக் காரணம் இதுவேயாகும். இந்நூலாசிரியராகிய 'பாய்ஜி' அவர்களின் வார்த்தைகளில் இதுபற்றி அவர் கூறுவதைக் கேட்போமாக:

"எவ்வாறு, ஏரி, குளம், குட்டை இவற்றில் பிரதிபலிக்கும் ஆகாயத்தின் உருவை முழுமையாக உணர முடியாதோ, அதுபோலவே அளவிடமுடியாத அம்மாவின் உண்மை சொரூபத்தை பல குறைபாடுகளுடைய இந்த ஜீவ கருவியின் மூலம் உணரவோ, அன்றி, உணர்த்தவோ முடிவதென்பது மிக அரிது." ஆயினும் இந்நூலின் மூலம் பாய்ஜியின் கூற்றுக்களால் நாம் ஓரளவுக்கு ஸ்ரீமா அவர்கள் சகல ஜீவர்களின் மீதும் காட்டிய அன்பையும், தூல நூலறிவால் பாதிக்கப்படாத ஞானத்தையும் இனப் பிரிவினை போன்ற எண்ணங்களற்று பேரறிவினையும்

உணர முடிகின்றதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மேலும் எப்போதும் அவரிடம் காணப்படும் பரவசமான ஆனந்தநிலை உலகில் எளிதில் காணக்கூடியதன்று.

ஸ்ரீ J.C. ரே (பாய்ஜி) அவர்கள் 1880 ஆம் ஆண்டு இப்போது பங்களாதேசத்திலுள்ள சிட்டகாங் என்னும் ஊரில் பிறந்தார். அங்கேயே தனது கல்வியையும் கற்றார். இந்நூல் ஒன்றிலிருந்தே வாசகர்கள் ஸ்ரீமா ஆனந்தமயியுடன் பாய்ஜி கொண்டிருந்த ஆன்மீக உறவைப் பற்றியும், அது சம்பந்தமான அவரது வாழ்வின் முக்கியமான அம்சங்களைப் பற்றியும் போதிய அளவுக்குத் தெரிந்து கொள்ள இயலும். 1937 ஆம் ஆண்டு அவர் 'மாத்ரு தரிசனம்' என்னும் இந்த நூலை எழுதி முடித்ததும், அவர் மா அவர்கள் மற்றும் போலாநாத்ஜி* சுவாமி அகண்டாநந்தஜி** அவர் புதல்வி குருப்ரியா தேவி ஆகிய இவ்வைவரும் கைலாய பர்வத யாத்திரை மேற்கொண்டனர். அவர்கள் சேர வேண்டிய இடத்தை அடையுமுன் குறிப்பிடத்தக்க சம்பவமொன்று நிகழ்ந்தது. பாய்ஜியும், பிதாஜியும் மற்றவர்கள் பின்னால் வர, இவர்கள் இருவரும் முன்னேறிச் சென்று 'மானஸரோவர்' ஏரியை நெருங்கியபோது பாய்ஜியின் உள்ளத்தில் சுபாவமாகவே பதிந்திருந்த, தான் சந்நியாசம் மேற்கொள்ள வேண்டுமெனும் இச்சை தீவிரமாக எழுந்ததால் ஆவேசத்துடன் தன்மேலிருந்த ஆடைகளைக் களைந்தெறிந்து பூணுலையும் கழற்றி ஏரியில் போட்டுவிட்டு ஜில்லென்ற ஏரித் தண்ணீரில் இறங்கி, கூப்பிய கைகளுடன் தன்னை அங்கேயே விட்டுச் செல்லும்படியும், இமயமலைக் காடுகளில் தான் வனாந்திரம் போக விரும்புவதாகவும் போலாநாத்திடம் வேண்டியுருகி நின்றார். போலாநாத் (பிதாஜி) அவர் வேண்டுகோளுக்கு செவிசாய்க்காததுடன் ஆடைகளை

---

* பூர்வாச்ரமத்தில் அம்மாவின் கணவர் ஸ்ரீரமண் மோகன் சக்ரவர்த்தி, பிற்காலத்தில் அவர் போலாநாத் என்றும் பிதாஜி என்றும் அழைக்கப்பட்டார்.

** பூர்வாச்ரமப் பெயர் ஷஷாங் மோகன் முகர்ஜி. இவர் டாகாவில் சிவில் சர்ஜனாக இருந்தார்.

அணியுமாறும் அம்மா வரும்வரை காத்திருக்கும்படியும் உத்தரவிட்டார். இரண்டு மணி நேரம் கழித்து அம்மா அவர்கள் அங்கு வரும்போதே அம்மாவின் வாயிலிருந்து சந்நியாச மந்திரங்கள் தானாகவே வெளிவந்தன. இவ்வாறு வழக்கத்தில் இல்லாத முறையில் பாய்ஜி அம்மாவிடமிருந்து சந்நியாச தீக்ஷையைப் பெற்று, "ஸ்வாமி மௌனானந்த பர்வத்" என்னும் பெயரில் அழைக்கப்பட்டார்.

அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க பாய்ஜி, அவர்களுடன் 'அல்மோரா' விற்குத் திரும்பினார். திரும்பும் வழியில் அவருக்கு கடுங் காய்ச்சல் ஏற்பட்டு, அல்மோரா சென்றடைந்த பல நாட்களுக்குப்பின் அவர் இறைவனடி சேர்ந்தார். அம்மா அந்நாட்களில் இரவு பகலெனப் பாராது கண் விழித்திருந்து அவரை மிக்க அன்புடன் கவனித்துக் கொண்டார். அதனால் பாய்ஜி அவர்களின் மறைவின்போது அம்மாவின் முகத்தில் எழில் மிக்க அமைதியில் எந்தச் சோர்வும் காணாமல் எப்போதும் போலவே புன்சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த அறையில் அம்மாவின் இருப்பே தெய்வீக மணத்தையும் அமைதியையும் தோற்றுவித்தது. ஞானக் கடலாகிய அம்மா தன் ஒப்பற்ற சீடனைத் தன்னோடு சேர்த்துக் கொண்டார்.

அம்மாவின் கரங்களில் ஸ்ரீபாய்ஜி ஒரு கருவியாகவே செயல்பட்டார். டேராடூனில் அம்மாவின் மற்றொரு ஆச்ரமத்தை பாய்ஜி அவர்களால் நல்ல முறையில் நடத்தி வந்தபடியால், அவர் மறைவிற்குப்பின் அவர் உதவியும், வழிநடத்தலுமின்றி ஆச்ரமத்தின் நிர்வாகம் எப்படி நடத்தப்படுமோ என்று நோயுற்ற பாய்ஜியிடம் பக்தரொருவர் கேட்டபோது, அவர் அளித்த பதில், "இந்த வேலைகள் யாவுமே எனதல்ல. ஆனால் அம்மாவுடையதே. அவர் அருளால் எல்லாம் நல்லபடி நடக்கும். அவர் கரங்களில் நாம் யாவரும் கருவிகளே."

இனி பாய்ஜியின் மரணத்தைப் பற்றி போலாநாத் எழுதியுள்ளதைக் காண்போம்: "அவர் கடைசிவரை பூரண நினைவுடன் இருந்தார். மூச்சு நிற்பதற்குச் சிறிது நேரத்திற்கு

முன்பு என்னிடம், ‘இதோ பாருங்கள் பிதாஜி, இந்த உலகத்தில் எவரையும் நமக்குச் சொந்தமெனச் சொல்ல முடியாது. ஆனால் ஸ்ரீஸ்ரீ மா ஒன்றே உண்மை’ என்றார். முடிவில் ‘மா, மா’ என்றும் ‘ஓம்’ எனவும் உச்சரித்துக் கொண்டே அவர் ஹரிராம் ஜோஷி என்பவரைக் கூப்பிட்டு, ‘கேளுங்கள், நாம் யாவரும் ஒன்றே. ‘மா’வும் நானும் ஒன்றே. பிதாஜியும் நானும் ஒன்றே.’ என்று கூறி அவருடைய பார்வையை அம்மா மேல் திருப்பி ‘மா, மா’ என்று சொல்லிக் கொண்டே உயிர் நீத்தார்.” பாய்ஜி தன் கைலாய யாத்திரையை துவக்குமுன் தான் வங்க மொழியில் எழுதிய ‘மாத்ரு தர்சன்’ நூலின் மூலப் பிரதியை மொழிபெயர்ப்பாளரிடம் கொடுத்துச் சென்றார். ஒரே நேரத்தில் இந்நூலை வங்கமொழி, இந்தி மொழி மற்றும் ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டுமென்ற தன் அவாவைத் தெரிவித்தார். ஆனால் அவருடைய எதிர்பாராத மறைவால் அவர் திட்டங்கள் யாவும் தடைபட்டன. முதலில் வங்க மொழியிலான மூல நூல் 1937 ஆம் ஆண்டில் பாய்ஜியின் மறைவிற்குப் பின் வெளியிடப்பட்டது. இந்தி மொழிபெயர்ப்பு 1951 லும், ஆங்கிலப் பிரதி ஸ்ரீகங்கா சரண் தாஸ் குப்தா அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு 1952 லும் வெளியிடப்பட்டது.

ஸ்ரீஸ்ரீ மா ஆனந்தமயி அவர்களின் சில அபூர்வ லீலைகளை முதன் முதலில் உலகமறிய வெளிக் கொணர்ந்தது ஸ்ரீபாய்ஜி அவர்களே ஆவார். உலகமெங்குமுள்ள சாதகர்களும், பக்தர்களும் இந்நூலை இயற்றிய பாய்ஜியின் அன்புத் தொண்டைப் பாராட்டியதுடன் ஆழ்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

ஆகஸ்ட் 13 ஆம் தேதி 1962 ஆம் ஆண்டு, பாய்ஜி அவர்களின் 25 ஆவது மகா சமாதி ஆராதனை நாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

**முற்றிற்று.**



*Sri Anandamayi Ma*

# ஸ்ரீஸ்ரீ ஆனந்தமயி - ஓர் சரிதச் சுருக்கம்

பாரத ஆன்மீக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதோர் நாள் 27-ம் தேதி ஆகஸ்ட் 1982 — ஏனெனில் அன்றைய தினம் — ஆத்ம சொரூபம் — வடிவில் நம்மிடையே வாழ்ந்து, அருள் பாலித்து, நரவேடத்தைக் களைத்து மீண்டும் லோகமாதா பராசக்தியாக நிலைபெற்ற நாள்!

அன்றைய பிரதமர் திருமதி இந்திராகாந்தி அன்னாரின் மறைவுச் செய்தியை அறிந்தவுடன், மௌரீஷியஸிலிருந்து (Mauritius) தன் பணிகள் அனைத்தையும் துறந்து உடனடியாக அவருடைய பூதவுடலைத் தரிசனம் செய்ய அன்றைய தினம் ஹரித்துவாருக்கு ஓடோடியும் வருகிறார்.

தம் வாழ்நாள் முழுவதும் மத நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகள் என்று சாடிய பாரத தேசத்தின் முதல் பிரதமர் பண்டித திரு. ஜவஹர்லால் நேருவும், தெய்வ நம்பிக்கை மிகுந்த அவருடைய துணைவியார் திருமதி கமலா நேருவும் நேரம் கிடைத்த போதெல்லாம் அவரைத் தரிசிக்க அடிக்கடி வருகின்றனர்.

பாரததேச பிதா மஹாத்மா காந்தி தம் அடியார் ஜமன்லால் பஜாஜ் அவர்களை நேரடியாக அனுப்பி, அந்த பராசக்தியின் மனிதத் திருவுருவத்தின் பாததூளி தம் ஆசிரமத்தில் பட வேண்டும் என்று வேண்ட, அவரும் பிப்ரவரி 1942-ல் அண்ணல் காந்தி அடிகளின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவரை தரிசித்தபோது அன்னை, “தேச சேவையில் கிடைக்கும் மகிழ்ச்சியைவிட பல நூறு மடங்கு இன்பத்தை இறைவனை உணர்ந்தால் நீ அடைவாய்” என்று அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகிறார்.

திருவனந்தபுரம், மைசூர், சோலன், மண்டி, பவநகர், டெஹ்ரி, காசி, குவாலியர், கோண்டல் சமஸ்தானங்களின் அரசர்கள், அரசியர்கள், மாநில ஆளுநர்கள், பிர்லா, மோடி, சிங்கானியா போன்ற தொழிலதிபர்கள் மற்றும் ஏராளமானோர் அன்னையின் அருளை நாடித் தஞ்சமடைகின்றனர்.

யோகி அரவிந்தர் அவருடைய புகைப்படத்தைப் பார்த்தவுடன், “இது சச்சிதானந்த சொரூபம்” என்கிறார். தெய்வ நெறிக் கழகத்தின் (Divine Life Society) தலைவர் பூஜ்யஸ்ரீ சிதானந்த மகராஜ், வருடம் தவறினாலும், அன்னையைத் தரிசிக்கத் தவறுவதில்லை.

இவ்வாறு ஆன்மீக, அரசியல் தலைவர்களாலும், ஏழை எளியவர்களாலும், மகாராஜாக்களாலும் கண்கண்ட தெய்வமாகப் போற்றப்பட்ட, “**ஸ்ரீஸ்ரீ ஆனந்தமயி மா**” அவர்களின் வாழ்க்கை வரலாறு அனைவராலும் அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

தற்போது பங்களாதேஷ் என்று அழைக்கப்படும் கிழக்கு வங்காளத்தில் கேயோரா கிராமத்தில் பிபின் பிஹாரி பட்டாசார்யா - மோக்ஷதா சுந்தரி தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக ஸ்ரீ ஆனந்தமயி அம்மை 30-4-1896 இல் அவதரித்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் நிர்மலா சுந்தரி தேவி என்பதாகும்.

பாரம்பரிய ரிஷி வம்சாதி வழிமுறைகளைப் பின்பற்றி வந்த பெற்றோர்களின் ஆன்மீக வாழ்வின் பயனால் சிசுவாகிய நிர்மலா சுந்தரிதேவி தன் குழந்தை பருவத்திலிருந்தே அழாமல் எப்போதும் அமைதியும், தன்னில் சுயமாய் எழுந்த இன்பங் கொண்ட தோற்றமும், மிகவும் எழில் கொண்ட உடை, நடை, பாவனைகளுடனும் காணப்பட்டார். அவரைக் கண்டோர் எவருமே அவரை அன்புடன் நேசித்தனர். கிராமப் பள்ளியில் இரண்டு வருடங்களே கல்வி பயின்றாலும் அவருக்கிருந்த அலாதியான கேள்வி ஞானத்தால் பாடங்களைப் படிக்காமலேயே வகுப்பில் கேட்ட கேள்விகளுக்கு சரியான விடைகளையளிப்பார். தன் 13-ஆம் வயதில் அந்தண

குலத்தைச் சார்ந்த ஸ்ரீரமண்மோஹன் சக்ரவர்த்தி என்பவருக்கு மணம் செய்விக்கப்பட்டார். தன் தாய் வீட்டிலும், தன் கணவரின் மூத்த சகோதரர் இல்லத்திலும் தன் 18 வயதுவரை தங்கியபின் தன் கணவருடன் வாழ்ந்தார். தன் மனைவியின் தோற்றத்தில் ஆழ்ந்த கம்பீரமான தெய்வீக பிரகாசமும், தன்னில் ஒடுங்கி, எச்சூழ்நிலையிலும் மாறாத அமைதியும் இன்பமும் பொங்கியதைக் கண்டுணர்ந்த அவர், அம்மையாரை தன் மகள்போல் பாவித்து அவருக்கு தொண்டு செய்தார். அம்மையார் அவரை **'போலாநாத்'** மற்றும் **'பிதாஜி'** என்றும் பெயரிட்டு அழைத்தார். அம்மா தன் குடும்பப் பணிகளை மிக கவனத்துடன் நேர்த்தியாக செய்து வந்த போதிலும், அவ்வப்போது மெய்மறந்து ஆழ்ந்த தியானத்தில் மூழ்கிடுவார். இப்படிப்பட்ட நிலை, எவருடைய உபதேசத்தாலோ, ஆன்மீக பிரசங்கங்களாலோ அல்லது புத்தகப் படிப்பாலோ தோன்றாமல் தன்னில் ஸ்வயமாகவே விளைந்த நிலையாகும். இதை கண்ணுற்ற போலாநாத் (பிதாஜி), அம்மாவின் போக்கிலேயே அவரை நடத்தி அவருக்குத் தொண்டராகவே தன் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து ஆன்மீகத்தில் உயரிய நிலையைப் பெற்று, 1938 ஆம் ஆண்டில் தேராடூனில் இறையடி எய்தினார். பிதாஜி 1938 ஆம் ஆண்டு சுவாமி பரமானந்தஜியை அம்மாவிடம் அறிமுகம் செய்வித்தார். சுவாமிஜி அம்மாவை தன் பரமகுருவாக ஏற்று அதே வருடம் பிதாஜியின் மறைவிற்குப்பின் ஆச்ரம பொறுப்புகளை ஏற்று மிகவும் நேர்த்தியாக நிர்வாகத் தொண்டு செய்து 1984-ல் இறையடி எய்தினார்.

அம்மையார் தன் 20 ஆம் வயதிலிருந்து ஆழ்ந்த தியான நிலைகளில் இருந்தபோது, இயல்பாகவே அவர் உடல் அபூர்வமான யோக முத்திரைகளுடன் காட்சியளிக்கும். இப்படி ஆழ்ந்த யோக நிஷ்டையின் வாயிலாக நிலைமாறா பூரண சஹஜ சமாதி நிலையை எய்தி, 'நான்' என்னும் போதம் முழுமையிலும் இறை உணர்வில் ஒன்றி, பரப்பிரம்மமாகிய அகண்ட உணர்வே 'நான்' என்னும் அத்துவித உணர்வில் சர்வசதா காலமும் மூழ்கியிருந்தார். திரிகால நிகழ்வுகள்

ஏதையும் 'நான்' என்று குறிப்பிடாமல் எல்லாம் உடல், மனம் வாயிலாக சர்வத்திற்கும் அடிப்படையாகிய பர உணர்வின் சந்நிதியில் செயல்படுகிறது என்பார்.

தாகாவில் நவாப் தோட்டம் மற்றும் கட்டிட வளாகத்திற்கு போலாநாத் பிதாஜி மேலாளராக (Manager) பொறுப்பேற்ற காலத்தில் முதன்முதலாக அங்கு நாம சங்கீர்த்தனம், பூஜைகளை நடத்தி பக்தர்களுக்கு சத்சங்கம் வழங்கினார். இதனால் மிகவும் மன அமைதியும், இன்பமும் பெற்ற ஆன்மீக நாட்டமுடையோர் பெருமளவில் அம்மாவை நாடி தெய்வீக வழிகளை பின்பற்றி மனநிறைவை எய்தினர். இங்குதான் 1924-ஆம் ஆண்டில் முதன்முதலாக 'பாய்ஜி' என்கிற இந்நூலாசிரியர் அம்மாவை தரிசித்து ஆன்மீகத்தில் ஈடுபட்டு தன் வாழ்நாள் முழுவதும் அவர் காட்டிய பாதையில் உத்தம சீடராய் வாழும் அருட்பேற்றினைப் பெற்றார்.

1929 ஆம் ஆண்டில் தாகாவில் அம்மாவின் பெயரில் முதன்முதலாக ஓர் ஆச்ரமம் உருவாகியது. ஆச்ரமத்திற்கு ஏழை, எளியோர், கல்விமான்கள், கல்லாதார், செல்வந்தர்கள், சிறுவர், சிறுமியர், இளைஞர், முதியோர் மற்றும் எல்லா மத, இனம் மற்றும் பாரதத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் அடியார்கள் அவரை நாடிப் பயனடைந்தனர். அக்காலங்களில் தென்நாட்டவர் வெகு சிலரே அம்மாவைப் பற்றி கேள்வியுற்றதால் அவரை நாடியவர் சிலரே.

1938 ஆம் ஆண்டில் பிதாஜியின் மறைவுக்கு முன்னதாகவே தாகாவை விட்டு வெளியேறி தேராடூனில் முதல்முதலாக ஸ்ரீமா ஆனந்தமயி ஆச்ரமம் ஒன்று அமைக்கப்பட்ட பின் பாரதத்தின் பல மாநிலங்களில் ஆச்ரமங்கள் உருவாகின. மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக பல காலம் இரவு பகலென்று பாராது அனைவருக்கும் அருள் பாலித்தார்.

தெய்வமே ஸ்ரீஸ்ரீமா ஆனந்தமயி என்னும் பெயரில் உடலேந்தி காட்சி யளித்தது என்பதே உண்மை. சுயமாகவே தன்னில் பூரண சொரூபப் பிரகாசம் ஒளி வீசியதால் கர்மம், பக்தி, யோகம் மற்றும் ஞானம் இவையாவுமே ஒன்றுபட்டு

இவரில் குடிகொண்டிருந்தன. ஆகையால் இவரை நாடிவந்த அடியார்கள் எம்மார்க்கத்தைச் சார்ந்தவராயினும், தனக்குள் அதை உணர்ந்து அவரவர் பக்குவத்திற்கேற்றபடி வழிகாட்டி அருளினார்.

அன்றாட வாழ்க்கை நடைமுறையிலும், ஆன்மீக கோட்பாட்டின்படி நடப்பதிலும் நம் ரிஷிகளின் வேதவாக்கியத்திற்கு மிகச் சிறந்த பிரமாணமாக வாழ்ந்து காட்டினார். அவரிடத்தில் தொடர்பு கொண்டோர் எவருமே படிப்படியாக அறியாமை நீங்கி அவரவருக்கு இட்டபடி தன் சுவதர்மத்தை உணர்ந்து தம் வாழ்வில் மன நிறைவை எய்தினர்.

எத்தனையோ எண்ணற்ற ஏழை, எளியோர் முக்கியமாக திக்கற்ற முதியோர்கள் ஏழ்மையாலும், நோயாலும் நொந்தவர்க்கு தன்னலம், காலம் இவைகளைப் பாராது நம் பார்வைக்கு மிக எளிமையான வழிகளில் அவர்களுக்கு குணமளித்து உதவுவார். இன்றும் வாரநாசியில் அவரால் நிறுவப்பட்ட வைத்தியசாலை மிகச் சிறப்பாக மருத்துவ உதவி அளித்து வருகிறது. உருவில் நாம் வெவ்வேறாயினும் உணர்வில் நாம் அனைவரும் ‘ஒன்று’ என்றும், தெய்வம் ஒன்றே; அதை நாடும் வழிகளே பேதமுடையதென்றும், முடிவில் யாவர்க்கும் சம்மதமான மோனானந்த அனுபவமே இறைவனை உள்ளத்தில் உள்ளபடி உணர்ந்தோரின் அடையாளச் சின்னமாகும் என்றும் உணர்த்தினார்.

அம்மாவைச் சுற்றிலும் காலையிலிருந்து மாலைவரை தியானம், யாகங்கள், பூஜைகள், பஜனை, ஆன்மீக சொற்பொழிவுகள், நாடிவந்தோர் எல்லோருக்கும் அன்னமளித்தல் மற்றும் தனிப்பட்ட நேர்முக பேட்டிகள் என்று எண்ணிலா வகையில் அடியார்களுக்குப் பெரும் ஊக்கமளித்து, அவரை நாடிய அனைவரும் மன நிறைவு பெறும்படிக்கு அருள் பாலித்தார். மேலும் ஆன்மீகத்தில் தீவிர நாட்டமுடையோர்பால் தன் கவனத்தை அலாதியாக காட்டி அவர்களில் மறைந்து கிடக்கும் தடைகளை தாயன்போடு நீக்கிச் சாதனையில் முன்னேறச் செய்வார். உதாரணமாக இஸ்லாமிய வழியில்

இறைவனை உணர்ந்திட தீவிர நாட்டமுடைய தலாத்துஃப் உசேன் (Talattuf Hussian) என்பவர் தேராடூனில் உள்ள பாரத நில ஆய்வு நிறுவனத்தில் (Survey of India) ஓர் உயர் அதிகாரியாக அவர் மெக்கா சென்றபோது ஒரு சூஃபி முனிவர் அவரை நோக்கி அவர் இந்தியா திரும்பியதும் ஓர் இந்து மகாத்மா அம்மையார், அவருக்கு ஆன்மீக குருவாக அமைவார் என்று சொல்லியபடி, தேராடூனில் அம்மாவைக் கண்டதும் முனிவர் சொல்லியதை உணர்ந்து அம்மையாரை குருவாக ஏற்று சாதனையில் அவர் காட்டிய ஆர்வத்தைக் கண்டு அம்மையார் அவருக்குப் பெரிதும் அளித்த அருளால் கிடைத்தற்கரிய தெய்வீக பேரின்பம் அடைந்தார்.

1952 ஆம் ஆண்டு அம்மா தென்னாடு விஜயம் செய்தபோது திருவண்ணாமலையில் உள்ள பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷி அவர்களின் சமாதி மஹா மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

அம்மாவின் உன்னத ஆன்மீக வாழ்வைப் பற்றி சொல்லப்போனால் அதற்கு முடிவே காணமுடியாது. சுருங்கச் சொன்னால் நம் காலத்தில் நமக்குத் தெரியவந்த மஹான்களுள் கடவுள் என்று போற்றப்பட்டு வாழ்ந்த ஸ்ரீஷீரடி சாயிபாபா, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷிகள், ஸ்ரீகாஞ்சி பரமாச்சாரியார் போன்ற மஹான்களின் வரிசையில் வைத்து வணங்கப்பட வேண்டியவர் ஸ்ரீஸ்ரீமா ஆனந்தமயி அவர்களும் ஆவார்.

1982 ஆம் ஆண்டில் அம்மா தேராடூன் ஆச்ரமத்தில் இருக்கையில் உயிர் நீத்தார். ஹரித்வார் அருகில் கன்கால் என்னும் தலத்தில் ஸ்ரீஸ்ரீமா ஆனந்தமயி ஆச்ரம வளாகத்தில் அவருடைய பூதவுடலின் சமாதி நிறுவப்பட்டுள்ளது. தற்போது நம் நாட்டிலும், மற்றும் உலக நாடுகளிலும் வாழும் ஆன்மீக அன்பர்கள் எம்மதத்தவராயினும் மற்றும் பல்வேறுபட்ட வழிமுறைகளை பின்பற்றுவோராயினும் அந்த சமாதிக்குப் பெருமளவில் விஜயம் செய்து அவர் அருளுக்குப் பாத்திரமாகின்றனர். மாத்ரு தரிசனம் என்னும் இந்நூலை படிக்கும் நம் தமிழ்ப் பெருமக்களுக்கு,

அவர்கள் பின்பற்றி வரும் ஆன்மீகப் பாதையில் அம்மையாரின் வாழ்க்கை முறையும், அவர் வாயிலாக கூறப்பட்ட அறிவுரைகளும் மிகவும் பயனளிப்பதாய் அமையும் என்பது அவரை நாடிப் பின்பற்றி வருவோரின் அனுபவக் கருத்து ஆகும்.

ஓம் தத் சத்!

# நூல் அறிமுகம்

இந்நூலை எழுதுவதற்கான எனது பலவீனமான முயற்சி ஸ்ரீஸ்ரீ மா ஆனந்தமயி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டுமென்பதோ, அல்லது உலகத்தின் கவனத்தை அம்மா அவர்களின் எல்லையற்ற சக்தியின்கண் ஈர்ப்பதற்காகவோ அன்று. நான் இச்சிறியக் குறிப்பு நூலின் மூலம் பாலைவனம் போல் வறட்சியாக இருந்த என் உள்ளம், அம்மா அவர்களால் எவ்விதம் இன்பச் சோலையாக மாறியது என்பதை என் சொந்த நேரடியான சில அனுபவங்களைக் கூறி விவரித்துள்ளேன். இத்தகைய முயற்சியில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமே யாயின் அவை என்னுடைய இயலாமையே என்பதால், அதற்காக அம்மா அவர்களிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கோருகிறேன்.

நான் என் சிறிய வயதிலேயே என் தாயை இழந்தேன். இக் காரணத்தால் யாரேனும் குழந்தைகள் 'மா, மா' , என்று கதறி அழுதால் அதைக்கேட்டு என் கண்களில் நீர்பிரவாக மெடுத்து ஓடும். பின் என்னை சமாதானப்படுத்திக் கொள்ளத் தரையில் படுத்து சத்தம் போடாமல் வருந்தி அழுவதைக் கண்ட என் உறவினர்கள் சொல்லக் கேட்டு இதை பின்னால் அறிந்தேன். என் தந்தையார் ஓர் மகானாக இருந்தமையால் என் சிறு வயதிலேயே என்னில் ஆழ்ந்த ஆன்மீக வித்துக்கள் விதைக்கப்பட்டன. 1908 ஆம் ஆண்டில் சக்தி வழிபாட்டில் எனக்கு மந்திரோபதேச தீக்ஷை எங்கள் குடும்ப குருவால் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக அம்பாளின் தொழுகையில் ஈடுபட்ட நான் பூஜை செய்யும்போது அம்பாளின்பால் உள்ளம் ஒன்றுபட்ட பூரண பக்திப் பரவசத்துடன் 'மா, மா' என்று கூவியழுது, கவலை நீக்கப்பெற்று இன்பமடைவேன். இப்படி நித்தியப்படி பூஜையில் ஈடுபட்டிருந்தாலும் எல்லா உயிரினங்களின் உள்ளங்களிலும் ஆன்மீக உத்போதத்திற்கு மூல காரணம் லோகாம்பிகையே என்பதை நான் உணர்ந்திலேன்.

ஆயினும் யாவரையும் இன்பத்திலாழ்த்தி உயிருடன் நடமாடும் அம்மாவைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களுடைய ஒரு பார்வையினால், என் உள்ளக் கொந்தளிப்பு நீங்கப் பெற்று அமைதியடைய வேண்டும் என்னும் தீராத தாகம் என்னுள் ஏற்பட்டது. எனவே நான் இது காரணமாக பல உயரிய மகான்களை அணுகியதுமன்றி பல ஜோதிடர்களையும் கலந்து ஆலோசனை கேட்டேன். அவர்கள் யாவரும் என்னை உற்சாகப்படுத்தினர். மேலும் தொடர்ந்து பல புண்ணியத் தல யாத்திரைகளையும் மேற்கொண்டும் ஆன்மீக பெரியோர்களை சந்தித்தும்கூட, என்னுள் எழுந்த, "அப்பேர்ப்பட்ட ஓர் உயர்ந்த ஞானத்தாயை சந்திக்கும் மிக உயரிய வாய்ப்பு எனக்கு உண்டா?" என்னும் கேள்விக்குப் பதில் எங்கும் கிடைக்கவில்லை.

நான் கொல்கத்தாவில் ஓர் அரசு வேலை பார்த்து வந்த அலுவலகம் 1918 ஆம் ஆண்டு டாகாவிற்கு (தற்போதைய பங்களாதேஷின் தலைநகர்) மாற்றப்பட்டதால் அத்துடன் என்னையும் அவ்வூருக்கே மாற்றினார்கள். அங்குதான் 1924 ஆம் ஆண்டின் முடிவில், நகரத்திற்கு அருகாமையில் ஷாபாக் (Shah Bag - நவாப் தோட்டம்) என்னும் தலத்தில் மாதாஜி சில மாதங்களாக மௌன விரதத்துடன் யோக நிட்டையில் நிலைத்திருப்பதைக் கேள்வியுற்றேன். ஓர் சில அரிய சந்தர்ப்பங்களில் அவர் தன்னை சுற்றி வட்டமாகக் கோடிட்டு சில மந்திரங்கள் சொல்லியோ அல்லது சில சாஸ்திர பகுதியையோ குறிப்பிட்டு, வந்த அடியார்களிடம் சுருக்கமாகப் பேசியோ அனுப்புவார். ஒருநாள் அமைதியான காலை நேரத்தில் நான் நவாப் தோட்டத்திற்குச் சென்றேன். அதிர்ஷ்டவசமாக பிதாஜி அவர்களின் உதவியால், ஒரு புதிதாக கல்யாணமான பெண் அடக்கத்துடனும் மிகவும் அழகாகவும் எப்படி அமர்ந்திருப்பாளோ அதைப்போல ஆழ்ந்த யோக நிலையில் அமர்ந்திருந்த அம்மாவைக் கண்டு என்னுள்ளம் சிலிர்த்தேன். எவருக்காக வெகுகாலங்களாக பல தலங்களில்

தேடியலைந்த நபர் இதோ என்முன் உருக் கொண்டிருக்கிறார் எனும் எண்ணம் மின்னலைப் போல் என் உள்ளத்தில் பாய்ந்தது.

என்னுள்ளத்தில் இன்ப வெள்ளம் பாய்ந்து என் உடல் உணர்ச்சிவசத்தால் கவரப்பட்டது. அம்மாவின் கால்களில் விழுந்து அழுது, "அம்மா! தாயே என்னை நீ உன்னிடமிருந்து ஏன் இவ்வளவு காலம் ஒதுக்கி வைத்திருந்தாய்?" என்று கேட்க என் உள்ளம் விழைந்தது.

நான் சில நிமிடங்களுக்குப் பிறகு, "எனக்கு ஆன்மீகத்தில் முன்னேற வாய்ப்புள்ளதா?" என்று அவரைக் கேட்டேன். அதற்கு அம்மா, "உனக்கு ஆன்மீகத்திற்கான தாகம் இன்னும் தீவிரமடையவில்லை," என்றார். நான் என்னுள் கொண்டு வந்த எண்ணச் சுமைகளை அம்மாவிடம் வெளிப்படுத்த மிகவும் முயன்றேன். ஆனால் அம்மாவின் இன்பமயமான அருட்கதிரால் எல்லாவற்றையும் தணியச் செய்யும் மௌனம் ஒன்றே நிலவியது. மேற்கொண்டு பேச்சற்று அங்கு அமர்ந்தேன். அம்மாவும் மௌனமாயிருந்தார். அம்மாவின் பாதங்களைத் தொட்டு வணங்க என்னுள் ஆழ்ந்த ஆவல் கொண்டேன். ஆனால் பயத்தாலோ, தயக்கத்தாலோ அல்லது அவரைச் சூழ்ந்த ஒரு மர்மமான சக்தியாலோ அவர் பாதங்களைத் தொடாமல் அவர் சந்நிதியை விட்டு வெளியேறினேன்.

நான் மேற்கொண்டு அம்மாவைக் காணப்போகாது "அம்மா எக் காலம்வரை என்னை மறைக்கும் திரையினை நீக்காமல் எனக்கு என் சொந்த தாய்போல் தன் அருகில் என்னை ஈர்க்க வில்லையோ அதுவரை நான் எப்படி உன் பாதங்களில் சரண் புகுவது?" என்று எண்ணி குழம்பிக் கிடந்தேன். ஒருபுறம் அவரைக் காண வேண்டும் என்ற எனது பேராவலும், அவர் தன்னை அண்டவிடாத தன்மையுமாக ஒரு முரண்பட்ட நிலை நிலவியது. ஒரு முடிவும் எடுக்க முடியாத இந்நாட்களில் அவ்வப்போது அருகிலிருந்த சீக்கியர் கோயிலின் தோட்ட மதில்சுவர் பக்கமாக யாரும் என்னைக் கண்டு கொள்ளாதபடி தொலைவிலிருந்து அம்மாவை தரிசிப்பேன். இந்த குழம்பிய

காலத்தில், "இது எங்கு முடியப் போகிறதோ?" என்று என்னுள் குழம்புவேன். என்ன செய்வது! எந்த முடிவும் எடுக்க நான் சக்தியற்றிருந்தேன்.

இதற்கிடையில் அம்மாவின் லீலைகளைப் பற்றிய தகவல்களை மிக உன்னிப்பாகக் கேட்டு மகிழ்வேன். இவ்வாறாக புயலில் சிக்குண்ட கப்பலைப் போல உள்ளக் கொந்தளிப்புடன் ஏழு மாதங்கள் கடந்தன. ஒருநாள் அம்மாவை என் இல்லத்திற்கு அழைத்து வந்தேன். இப்படி வெகு காலத்திற்குப்பின் அம்மாவை நேரில் கண்டதால் என்னுள்ளத்தில் அளவற்ற ஆனந்த பரவசம் ஏற்பட்டது. ஆனால் இப்பேரானந்தம் நீடிக்கவில்லை. ஏனெனில், அம்மா என் வீட்டிலிருந்து வெளியேறும்போது நான் பணிந்து அவர் பாதங்களைத் தொட்டு வணங்க முயன்றபோது அவர் பாதங்களை என்னால் தொடவிடாதபடி உள்ளிழுத்துக் கொண்டது என் மனதை மிகவும் புண்படுத்தியது.

என் உள்ளத்துள் ஏற்பட்ட போராட்ட வேதனைகளைத் தணிக்க பல ஆன்மீக தத்துவார்த்த நூல்களைப் படித்த பின் 'மதமும் மத சம்பந்தமான சாதனைகளும்' (Religion and Religious practices) என்னும் பொருட் கொண்ட ஒரு சிறிய நூலை வெளியிட முடிவெடுத்து, அதன்படி 'சாதனா' என்னும் தலைப்பில் எழுதி வெளியிட்டேன். இதன் ஒரு பிரதியை அம்மாவிற்காக ஸ்ரீபுபேந்திர நாராயண் தாஸ் குப்தா அவர்கள் மூலம் அனுப்பினேன். அம்மா உடனே, "இந்த நூலாசிரியரை என்னை வந்து காணும்படி சொல்லுங்கள்," என்று அவரிடம் கூறினார். அம்மா விடுத்த இந்த அழைப்பை ஏற்று காலை வேளையில் நவாப் தோட்டத்திற்குப் போனேன். அம்மா தான் மேற்கொண்டிருந்த மூன்று வருட மௌன விரதம் முடிவுற்றிருப்பதைக் கண்டறிந்தேன். அம்மா என் அருகில் உட்கார்ந்து நான் வெளியிட்ட நூலை முழுமையாக என்னால் படிக்கப்பட்டதைக் கேட்டார். அதில் அடங்கிய பொருளைக் கேட்டபின் "உன்னுடைய நூல் முற்றிலும் நன்றாக உள்ளது" என்றும், மேலும், "மூன்று வருடகால மௌனத்தால் என்

குரல்வளை நன்கு இயங்கவில்லையென்றாலும் இன்று என் வாயில் வார்த்தைகள் தடை செய்ய முடியாத வேகத்தில் வருகின்றன?" என்றும் "எண்ணமும் செயலும் மேலும் செம்மைப்பட முயற்சி செய்," என்றும் அவர் கூறினார். அம்மாவுடன் இந்த சந்திப்பில் அம்மாவின் கணவரான போலாநாத், அதாவது, பிதாஜி அவர்களும் கூடவே இருந்தார். அப்போது நான் ஒரு சிறு குழந்தை தன் பெற்றோர்களின் முன் உட்கார்ந்திருப்பதைப் போலும், என்முன் ஏதோ ஒரு புதிய உலகம் தன் வாயிலைத் திறப்பதைப்போலும் உணர்ந்தேன். இந்த சந்திப்பிற்குப் பிறகு நான் அடிக்கடி நவாப் தோட்டத்திற்குச் சென்று வரலானேன். என் மனைவியிடம் ஏதாவது காணிக்கைப் பொருளுடன் அம்மாவை தரிசனம் செய்யும்படி வேண்டினேன். அந்த நாட்களில் அம்மா தங்க மூக்குத்தி அணிவதுண்டு. என் மனைவி ஒரு பெரிய வெள்ளித் தட்டில் சிறிதளவுத் தயிர், அரைத்த சந்தனம் மற்றும் ஒரு நல்ல வைர மூக்குத்தி இவைகளை எடுத்துக் கொண்டு அம்மாவை தரிசித்து அவர் பாதங்களில் விழுந்து வணங்கி மிக்க பக்தியுடனும் மகிழ்வுடனும் இந்த காணிக்கையை செலுத்தினாள்.

அதன் பின்னர் இதுபற்றி நான் அறிந்ததாவது, அம்மா அச்சமயங்களில் தான் உண்ணும் உணவை தட்டிலோ அல்லது இலையிலோ உண்ணாமல் வெறும் தரையில் இட்டு உண்ணுவார். இதை கவனித்த பிதாஜி மிக்க வெறுப்புடன் அம்மாவிடம், "நீ என்ன, பித்தளை அல்லது வெங்கலத் தட்டிலோ உணவருந்தாமல் வெள்ளித் தட்டிலேதான் உண்ணுவாயோ?" என்றார். அதற்கு அம்மா, "ஆம், (ஆனால் அடுத்த மூன்று மாதத்திற்கு இதைப்பற்றி எதுவும் பேசாமலும்) வெள்ளித் தட்டுக்காக எந்த நடவடிக்கையும் தாங்கள் எடுக்க வேண்டாம்" என்று கூறிவிட்டார். மேலே சொன்னதுபோல் மூன்று மாதத்திற்குள்ளாகவே வெள்ளித்தட்டு அவருக்கு என் மனைவி மூலம் கிடைத்தது.

ஒருநாள் அம்மா என்னிடம் சொன்னார், "நீ ஒரு உத்தம பிராமணன் என்பதைக் கவனத்திற்கொள்; மேலும் உனக்கும்

இந்த சரீரத்திற்கும்* இடையில் ஒரு அதிசூக்குமமான நெருங்கிய ஆன்மீகத் தொடர்புள்ளது” என்றும் கூறினார். அன்றிலிருந்து என் உடல் தூய்மையை எல்லா விதத்திலும் காத்திட முயன்றேன்.

அம்மாவின் பல பக்தர்கள் பற்பல தேவ, தேவிகளின் ரூபங்கள் அவர் உடலில் குடிகொண்டு காட்சியைப் பெற்ற சம்பவங்களை அறிந்தேன். ஆனால் என் கண்ணாலேயே இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆன்மீக சக்திகளின் லீலைகளை அம்மாவின் தினப்படி வாழ்க்கையில் கண்டேன். என்னுடைய தாழ்மையான ஒரே லட்சியம் என்னவென்றால் அம்மாவிடம் காணப்பட்ட அதீத பொறுமையும், அமானுஷ்ய அமைதியான இச்சிறப்பான கொள்கைகளை உதாரணமாக வைத்து என் வாழ்வை அமைத்துக் கொண்டால் அதுவே எனக்குப் போதுமானது என்பதாகும். அம்மாவின் அதீத நிலைகளைப் பற்றி அறிந்திருந்தாலும் நான் வியக்கத்தகும் காட்சிகளை அவரிடம் காண விரும்பவில்லை.

எனினும் மனிதனின் இயற்கையான உத்வேகம், தெய்வீக சக்தியை தூலவடிவில் வாழும் மனிதனில் கண்டு தெளிவதே ஆகும். ஆகவே ஒருநாள் அம்மா தனித்திருந்தபோது அவரிடம் இதைப்பற்றி விசாரிக்க ஆவல் என்னில் தூண்டப்பட்டது. எனவே நான், “அம்மா, நான் வணங்கிக் கேட்கிறேன், நீங்கள் யார்? அதை எனக்குச் சொல்லுங்கள்” என்று கேட்டேன். அதற்கு அம்மா அன்புடன் பெருத்த குரலில் சிரித்து, “உன் உள்ளத்தில் இப்படிப்பட்ட குழந்தைத்தனமான கேள்விகள் ஏன் எழுகிறது? தேவ தேவாதிகளின் காட்சிகள் யாவும் சம்ஸ்கார பலத்தின்படி தோன்றுகிறது. நான் எதுவாய் இருந்தேனோ அதுவாகவே இப்போதும், எப்போதும் இருப்பேன். நீ என்னைப் பற்றி எது சொன்னாலும், கற்பனை செய்தாலும் அதெல்லாம் நானே. மேலும் இந்த சரீரம் முன்வினைப் பயன்களை அனுபவிக்க

* அம்மா தன்னைச் சுட்டிக் காட்டும்போது “இந்த உடலென்றே பொதுவில் குறிப்பிடுவார்.”

உடலுருக் கொள்ளவில்லை என்பது மகத்தான உண்மையாகும்" என்று கூறினார். மேலும் அவர் "இந்த சரீரம் உங்கள் எல்லோருடைய குறிக்கோளின் சங்கல்பத் தொகுப்பின் தூல வடிவத் தோற்றமே. நீங்கள் யாவரும் விரும்பிக் கேட்டதையே இப்போது பெற்றிருக்கிறீர். ஆகவே இந்த பொம்மையுடன் சில காலம் விளையாடுங்கள். மேற்கொண்டு இதைப்பற்றி எழும் கேள்விகள் யாவும் பயனற்றதேயாகும்." இதற்கு நான் "அம்மா, உங்களால் சொல்லப்பட்ட இவ்வார்த்தைகளால் என் வேதனைப்பட்ட மனத்திற்கு நிறைவு கிடைக்கவில்லையே," என்று சொன்னேன். இதைக் கேட்ட அம்மா சிறிது ஆவேசத்துடன், "மேற்கொண்டு நீ என்ன விரும்புகிறாய் என்பதைச் சொல்லு," என்று சொன்னவுடன் அம்மாவின் முகத்திலிருந்து கண்ணைக் கூச வைக்கும் அளவுக்கு மிகவும் தெய்வீகமான ஒரு ஒளி பிரகாசித்தது. இதைக் கண்ணுற்ற நான், வியப்பாலும் பயபக்தியாலும் தாக்கப்பட்டு பேச்சற்று நின்றேன். நான் இதுகாறும் அம்மாவின்மேல் கொண்டிருந்த எல்லா சந்தேகங்களும் நீங்கியது.

சுமார் பதினைந்து நாட்கள் கழித்து ஒரு காலை வேளையில் நான் நவாப் தோட்டத்திற்கு போயிருந்தபோது அம்மா உறங்கும் அறை மூடப்பட்டிருந்ததால் அறையிலிருந்து சுமார் முப்பது அடித் தொலைவில் அமர்ந்திருந்தேன். திடீரென்று கதவுகள் திறந்த அச்சமயத்தில் வெளித்தோன்றிய காட்சியைக் கண்டு ஏதுமறியாத குழம்பிய நிலையில், மனத்திற்கு ரம்மியமான மிக்க தெய்வீகக் களையுடைய அம்பாளின் உருவம் காலை சூரிய ஒளிபோல் ஜொலித்து அந்த அறையையே ஒளிமயமாக்கியது. இப்படித் தோன்றிய ஒளியை இமைப் பொழுதில் தன்னுள் ஒடுக்கிக் கொண்ட அம்மா அங்கு எப்போதும் போல் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார்கள். ஒரு நொடிப் பொழுதிற்குள் தோன்றிய காட்சி முற்றிலும் ஒரு தெய்வீக மந்திரஜாலம் போல் மறைந்தது. எனக்கோ நான் ஒரு சொப்பன உலகத்திலிருந்து கீழே தள்ளப்பட்டவன் போல் தோன்றியது. நான் அம்மாவிடம் சில நாட்களுக்கு முன்

கேட்டுக் கொண்டதன் பேரில் அவ்வாறு அம்மா காட்சியளித்தார் என்பதை உணர்ந்து, உடனே பக்தியுடன் ஒரு தோத்திரப் பாடலைப் பாடி இப்படியாக வேண்டினேன், "நான் உன் மதிப்பிற்குகந்த பிள்ளையாக இருப்பேனாக, உன் தாயுளங் கொண்ட அன்பான அருளுக்கு தகுதியைப் பெறுவேனாக." சிறிது நேரத்திற்குப் பின் அம்மா என்னை நோக்கி வரவே, அவர் பாதங்களில் விழுந்து வணங்கினேன். அப்போது ஒரு பூவுடன் சில தர்ப்பைப் புல்லும் சேர்த்து என் தலைமேல் வைத்தருளினார். இது என்னைப் பெரும் இன்பத்திலாழ்த்தியது. அந்த அருள் மயமான காலம் திரும்பவும் வந்திட விரும்புகிறேன். ஆனால் போன நாள் திரும்பி வருவதில்லையே!

அந்தத் தருணத்திலிருந்து அம்மா எனக்கு மட்டும் தாயல்ல; இப்பிரபஞ்சப் படைப்பிற்கே தாயானவர் என்னும் நம்பிக்கை என்னுள் வேரூன்றியது. நான் உடனே வீடு திரும்பினேன். கலங்கிய மனம் ஒன்றுபட்டவுடன், முன் காட்சியளித்த அம்மாவின் அதே உருவம் மின்னல் ஒளிபோல் என் உள்ளத்தில் பிரகாசித்ததை யடுத்து என் கண்களில் கண்ணீர் பெருகி ஓடியது. அந்த குறிப்பிட்ட நாளிலிருந்தே அம்மாவின் செயல்பாட்டால் என்னுள் பெரும் மாறுதல் ஏற்பட்டு மிக இயல்பாகவே என் இளமையில் உபதேசம் பெற்று பதினெட்டு வருட காலமாக பூஜித்து வந்த அம்பாளின் இடத்தை, அம்மாவின் உருவம் என்னில் இடங் கொண்டது. இந்த திடீர் மாறுதலால் சில சமயங்களில் என்னுள், இப்போது பின்பற்றும் வழிமுறை சரிதானா என்னும் சந்தேகம் தோன்றியது. ஆனால் ஓரிரு நாட்களுக்குள் அம்மா, தனக்குள்ள உரிமையுடன் என் உயிரில் இடங்கொண்டு என்னை முழுமையாக ஆட்கொண்டார்.

ஸ்ரீ ஆனந்தமயிமாவின் பூர்வ பெயர் '**நிர்மலா சுந்தரிதேவி**', அவர் தற்போது பங்களா தேசமென்று அழைக்கப்படும் நாட்டில் டிப்பெரா மாவட்டத்தைச் சேர்ந்த கேயோரா என்னும் கிராமத்தில் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி 1896 ஆம் ஆண்டில் வெள்ளிக்கிழமை காலை, ஒரு மணி

பன்னிரெண்டு நிமிடங்கள் , காலை விடியும் முன்னதாகப் பிறந்தார். அம்மாவின் தந்தையின் பெயர் ‘பெபின் பெஹாரி பட்டசார்ஜீ’, இவர் தொன்றுதொட்டு புகழ்ப்பெற்ற காஸ்யப அந்தண குலத்தில் அதே டிப்பெரா மாவட்டத்தில் ‘வித்யகூட்’ என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தம் இளமைக் காலத்தை தன் தாய் மாமன் வீட்டில் கழித்தார். அம்மாவின் தாய் திருமதி மோக்ஷதா சுந்தரி தேவி. இவரும் டிப்ரா மாவட்டத்தைச் சார்ந்த சுல்தான்பூர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் குடும்பத்தைச் சார்ந்த பலர் புகழ்பெற்ற கல்விமான்களாகவும், சிறந்த தெய்வ பக்தி யுடையவர் களாகவும் வாழ்ந்தனர். அம்மாவின் பெற்றோர்கள் மிக்க அன்புகொண்ட உள்ளமும், தயையுடைய பண்பும் இறைவனிடம் பக்தியும் கொண்டு மிக எளிமையான வாழ்க்கை முறைகளை பின்பற்றிச் சமூகத்தின் உயர்ந்த உதாரணச் சின்னமாகத் திகழ்ந்தனர்.

அம்மாவின் வயது பன்னிரெண்டு வருடம் பத்து மாதங்கள் இருந்தபோது, விக்ரம்பூரில் அட்பாரா என்னும் கிராமத்தைச் சார்ந்த, உயர்ந்த பரத்வாஜ வம்சத்தில் அந்தண குலத்தவரான ஸ்ரீஜுத் ரமண்மோகன் சக்ரவர்த்தி என்பவருடன் மணம் செய்விக்கப்பட்டது. இவர் தன் வாழ்நாளை சமூக நல சேவைக்கே அர்ப்பணித்தார். பிற்காலத்தில் இவர் போலாநாத் என்றும், ராம் பகலா (ராமர் பித்தன்) மற்றும் பிதாஜி என்றும் அழைக்கப்படலானார்.

அம்மா பிறந்த இடமாகிய அவர் வீடு, அவருடைய அடியார்கள் நிறுவனத்தால் வாங்கப்பட்டது. அம்மா 1937 ஆம் ஆண்டு தான் பிறந்த ஊர் கேயோரா போனபோது, அடியார்களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, தன் உடல் பிறந்தபோது பூமியை முதன்முதலில் தொட்ட இடத்தைத் துல்லியமாகக் காட்டினார்கள்.

அம்மா தன் இளமைக் காலங்களில் பிறர் கவனத்தில் படாவண்ணம் எளிமையாக கேயோரா மற்றும் சுல்தான்பூர் கிராமங்களில் வாழ்ந்தார். மணம் முடித்தபின் சில மாதங்கள்

போலாநாத்தின் மூத்த சகோதரர் இருந்த ஸ்ரீபூரிலும், நருண்டி என்னும் ஊர்களிலும், தன் கணவரான போலாநாத்துடன் அட்பாரா கிராமத்தில் சில காலமும் வாழ்ந்தார். தாகா வரும்முன், மூன்று வருடங்கள் வித்யாகூட்டிலும் மேலும் ஆறு வருடங்கள் (1918-1924) போலாநாத்துடன் பஜீத்பூரிலும் அம்மா வாழ்ந்தார்கள்.

ஆன்மீக பக்திப் பாடல்களின்பால் ஆழ்ந்த நாட்டம் முதன்முதலாக அம்மாவிடம் அஷ்டக்கிராம் என்னும் தலத்தில் ஏற்பட்டது. பஜீத்பூரில் இருந்த காலங்களில் ஒரு சில காலங்களில்தான் பக்திப் பாவனையிலும் மற்றபடி பெரும்பாலும் யோகாப்யாசங்களிலும், மாந்திரிக சைகை குறிப்பீடுகளால் வெளிப்படும் மந்திரபாவ நிலைகளிலும் அவருடைய மனம் பெரிதும் வசப்பட்டிருந்தது. 1924 ஆம் ஆண்டு தாகாவிலுள்ள நவாப் தோட்டம், வந்தபோது எந்தச் சலனமுமற்ற மௌனத்தில் காணப்பட்டார். அம்மாவின் வாழ்வு முழுமையிலும் அமைதியில் சமாதி நிலைக் கொண்டு இருத்தலே பரவலாகக் காணப்பட்ட தோற்றமாகும். அந்த ஆழ்ந்த சூக்கும நிலை சொல்லால் வர்ணிக்க இயலாத ஒன்றாகும். இப்படிப்பட்ட காலங்களில் பலதரப்பட்ட தெய்வீக பாவனைகளுக்கிடையே ஏற்பட்ட உள் செயல்பாட்டால் வெளித்தோன்றிய நிலைகளை என்னென்று உரைப்பது!

தாகாவிலிருந்தபோது அம்மாவை நாடி பக்தர்கள் சூழ்ந்தனர். அவர்களில் பலர் பூஜைகளிலும், பக்திப் பாடல்களைப் பாடுவதிலும், யாகங்களிலும் பங்கேற்றுப் பயனடைந்தனர். அனைவரும் அம்மாவை, 'ஷா தோட்ட அம்மா' என்று அழைப்பார்கள். அம்மாவின் சந்நிதியில் சத்சங்கம் கொண்ட ஜீவாத்மாக்கள் அடைந்த ஆனந்த பரவசமும், அதனால் அவர்களின் ஆழ்ந்த சலனமற்ற அமைதியையும் காணும்போது இப்படிப்பட்ட மேலான நிலையினை அம்மாவின் முன்னிலையால் பெற்று எப்படி அதில் அவர்களை மிகவும் ஆழ்த்தியது என்பதை வர்ணித்தல் மிகக் கடினமானது. பக்தர்கள் யாவரும் அவர்களின் வாழ்நாளில்

இப்படிப்பட்ட, எங்கும், எப்போதுமே அனுபவிக்காத இந்த அபரிதமான ஆனந்த செல்வத்தை அம்மாவின் அருளாலேயே அடைந்து இன்புற்றோம் என்று அவர்களுடைய மனநிறைவை வெளிப்படுத்துவார்கள். தாகாவிலுள்ள சித்தேஸ்வரி காளியம்மனின் கோயிலுடைய பூர்வீக சரித்திரம் அம்மா பஜீத்பூரில் இருக்கையில் அவர் உள்ளத்தில் தானாகவே உதயமானது. இந்தக் கோயிலை பராமரிக்க தேவைப்பட்ட தனாதிப் பொருட்கள், அம்மா நவாப் தோட்டத்தில் இருக்கும்போது தாகாவில் அஞ்சல் துறையின் மேலாளர், காலஞ்சென்ற ராய்பகதூர் பிராண் கோபால் முகர்ஜீ அவர்கள் மற்றும் போல் சந்திர வாசக் அவர்களாலும் ஏற்படுத்தப்பட்டது.

அம்மாவை நான் முதன்முறையாக தரிசித்தபோது, என்னைப் பற்றி அம்மா "உன்னிடம் ஆன்மீக பாதையை மேற்கொள்ள போதிய தீவிர தாகமில்லை," என்று குறிப்பிட்டார். ஆனால் தன்னிலெழுந்த உலகப் பற்றினால் துன்பங்களுக்கு ஆளாகி தத்தளிக்கும் ஒருவன், தன் மனதை வேதனைப்படுத்தும் கட்டுக் கடங்காத உணர்ச்சிகளையும், திடீரென்று எழும் எண்ணங்களையும் முழுமையாக அம்மாவின் பாதங்களில் தன்னையும் சேர்த்து அர்ப்பணிக்கும் வழியைக் கண்டறிந்தா லொழிய, மேம்பட்ட ஆன்மீக வாழ்வைக் கடைப்பிடிக்க தீவிர நாட்டங் கொள்வதென்பது முற்றிலும் முடியாத ஒன்றேயாகும். ஆகவே, என் இதயத்தில் எப்போதும் நான் அம்மாவிடம், "ஹே, தாயே, எல்லா உயிரினங்களிலும் நீயே பசி ரூபமாக வெளிப்படுகிறாய், (யாதேவி ஸர்வ பூதேஷு க்ஷுதா ரூபேண ஸமஸ்திதா), என்னுள் எப்பொருள் உண்மையான நிலைமாறாத, சாசுவத நிலையுடையதோ அதன்மேல் தீவிர தாகம் அல்லது நாட்டங் கொடு," என்று வேண்டுவேன். இங்கு, அளவுகடந்த தன் கருணையால் எப்போதும் என் நிலையற்ற மனநிலையை எவ்வாறு எங்கும் பரந்துள்ள தன் இருப்பின்பால் நாடச் செய்தார் என்பதை கீழ்வருமாறு வர்ணிக்கிறேன்:

கட்டம் (1): ஓரிரவு நான் என் வீட்டின் மாட முகப்பில் நல்ல நிலவின் ஒளி, என்னைச் சூழ்ந்த வஸ்துக்களையும் என்னையும் பிரகாசிக்கச் செய்த வண்ணம் நான் உலாவிக் கொண்டிருக்கும்போது ஏதோவொன்று என் பக்கத்தில் இயங்குவதை உணர்ந்து, சற்றுத் திரும்பிப் பார்த்தேன். என்னை வியப்பிலாழ்த்தியபடி அம்மாவின் உருவம் பல சிவப்பு வண்ணக் கோடிட்ட வெண்புடவையுடன் ஊசலாடிச் சென்றது. ஆனால் இரண்டு மணி நேரம்முன் நான் ஆச்ரமத்திலிருந்து திரும்பும்போது அம்மா, கட்டியிருந்த வெண்புடவையின் ஓரத்தில் சிவப்பு நிறங்கொண்ட ஒரே அகலப் பட்டையிட்ட புடவை அணிந்திருந்ததைப் பார்த்தமையால் நான் பார்த்தக் காட்சி அம்மா அவர்களோ, இல்லையோ என்னும் சந்தேகம் எழுந்தது. மறுநாள் காலையில் நான் அம்மாவிடம் சென்றபோது நான் முன் இரவில் தரிசித்தபோது அணிந்திருந்த ஆடையையே இப்போதும் அம்மா அணிந்திருப்பதைக் கண்டேன். நான் முன் தினம் ஆச்ரமத்திலி ருந்து திரும்பியபோது மற்றொரு அடியார் ஆச்ரமத்திற்கு வந்து அம்மாவை அந்தப் புதிய ஆடையை அணியச் செய்தார்களென்றுப் பிறர் சொல்லக்கேட்டு அறிந்தேன். அம்மாவிடம் நான் கண்ட தரிசனத்தைப் பற்றி தெரிவித்தபோது, மிகச் சாதாரணமாக அதற்கு அம்மா, “நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதைக் காணவே அங்கு வந்தேன்” என்றார்.

கட்டம் (2) ஒருநாள் அம்மா என் வீட்டிற்கு வந்து எங்களுடன் முதல் மாடியில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது, அம்மாவை அழைத்துச் செல்ல ஒரு மோட்டார் வண்டி வந்தது. இப்படி முன்னேற்பாடு செய்திருந்ததை நான் அறிந்திலேன். அம்மா புறப்பட ஆயத்தமானார்கள். ஆனால் நானோ, அம்மா வீட்டிற்கு வந்த உடனேயே புறப்படுவது கண்டு மனம் வருந்தினேன். மிகவும் வருந்திய உள்ளத்துடன் அம்மாவை வழியனுப்ப கீழ் தளத்திற்கு வந்தேன். அம்மா வண்டியிலேறி என்னைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்கள்.

வண்டி ஓட்டுநர் வண்டியை முடுக்கினார். ஆனால் வண்டி நகரவில்லை. அம்மாவின் முகத்திலோ லேசான சிரிப்பு காணப்பட்டது. வண்டி ஓட்டுநரின் எந்த முயற்சிக்கும் வண்டி அசையவில்லை. உடனே ஒரு குதிரை வண்டி கொண்டு வரப்பட்டது. அப்போது, மோட்டார் வாகனம் வந்தும் வாடகைக் குதிரை வண்டியில் அம்மா போவதை நினைத்து என் மனம் வருந்தியது. திடீரென்று அச்சமயம் மோட்டார் வண்டி என்னை வியப்பித்தும், சந்தோஷமடையச் செய்தும் ஓட ஆரம்பித்தது. அம்மா அதில் புறப்பட்டுச் சென்றார்கள்.

கட்டம் (3) நவாப் தோட்டத்தில் அம்மாவைப் பற்றிக் கேள்வியுற்ற மக்களின் வருகை மிகவும் அதிகரித்தது. ஒருசமயம் என்னால் நான்கு நாட்களுக்கு அம்மாவை காண முடியவில்லை. ஐந்தாவது நாள் காலையில் போக முடிவெடுத்தேன். ஆனால் மனம் மாறியதால் போகவில்லை. மனம் நொந்து என் அறையில் அமர்ந்திருந்தபோது என்னை வியக்க வைக்கும் வகையில் என் எதிரிலிருந்த சுவற்றின்மேல் திரைப்படம் போல் அம்மாவின் முழுவுருவம் தான் ஏதோ வருந்திய நிலையில் இருப்பதைப் போல் காட்சியளித்தது. அச்சமயம் நான் திரும்பிப் பார்த்தபோது என் அருகில் ஸ்ரீ அமுல்ய ரத்தன் சௌதரி நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். அவர், “உன்னை மாதாஜி, தன்னிடம் அழைத்து வரும்படி ஒரு குதிரை வண்டியை அனுப்பியுள்ளார்” என்று சொன்னார். நவாப் தோட்டத்தை நான் சென்றடைந்தபோது அம்மா என்னைப் பார்த்து, “கடந்த சில நாட்களாக சலித்துக் கொண்டிருக்கும் உன் மன நிலையைக் கண்டேன். சலனமற்ற மன அமைதியை ஒருவன் அடைவதற்கு முன்னோடியாக ஏதேனும் மனக் குழப்பமில்லாவிட்டால் சுத்தமான மன அமைதியை அடைய முடியாது. சுத்தமான நெய், சந்தனக் கட்டை அல்லது வைக்கோலையோ பயன்படுத்தித் தீயை மூட்டிட தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியபின் அந்தத் தீயின் ஒளி இருளைப் போக்குவதுபோல், உள்ளத்தில் மூண்ட

தீயின் ஒளி, எல்லா மன இருளையும், மதமதப்பையும், மனச் சோகத்தையும் முதலிலூட்டி பின்பு அனைத்துத் தடைகளையும் நாளடைவில் சிறுகச் சிறுக எரித்து விடும். ஒரு பெருந்தீ ஏற்பட்டு பெரிய அரண்மனை மற்றும் நூற்றுக்கணக்கில் வீடுகளை அழித்திட ஒரு தீப்பொறி போதுமானது என்பதை நீ அறிவாய்," என்று கூறினார்.

கட்டம் (4) நான் பணி செய்யும் அலுவலகத்திலோ அல்லது வீட்டில் நடு இரவிலோ அம்மாவைப் பார்க்க வேண்டுமெனும் தீவிர இச்சை என் மனதை வாட்டும் போதெல்லாம் என் முன் தோன்றி "என்னை நீ அழைத்தாய் அதனாலே நான் இங்கு வந்தேன்," என்று கூறுவார்.

கட்டம் (5) ஒருநாள் மதியம் அலுவலகத்திலிருந்து நான் வீடு திரும்பியபோது, யாரோ அடையாளம் தெரியாத ஒருவர் ஒரு பெரிய மீனை* என் வீட்டில் தரையில் போட்டுவிட்டு விரைவில் திரும்பி வருவதாகச் சொல்லிப் போனார் என்பதை என் மனைவி சொல்லக் கேட்டறிந்தேன். மாலை வெகு நேரமாகியும் அந்த நபர் திரும்பி வராமையால் அந்த மீன் சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு நவாப் தோட்டத்திற்கு அனுப்பப்பட்டது. அடுத்தநாள் காலை நான் அம்மாவைக் காணச் சென்றபோது பிதாஜி (போலாநாத்) "நேற்று உங்கள் அம்மா ஜோதிஷ் (பாய்ஜி) என் 'தெய்வம்' என்று என்னிடம் சொன்னார்" என்பதை எனக்குத் தெரிவித்தார். இதைப் பற்றி நான் விசாரித்ததில் எனக்குத் தெரிய வந்தது என்னவெனில், நேற்றுக் காலையில் ஆச்ரமத்திற்கு வந்த சில பக்தர்கள் அம்மாவிடம் பிரசாதத்தைப் பெற்று உண்டார்கள். ஆனால் மாலையில் அன்று நாம சங்கீர்த்தனத்தில் அதிகமாக அடியார்கள் வந்து, அவர்கள் யாவரும் அம்மாவிடம் பிரசாதம் பெற விரும்பினர். ஆனால் பிரசாதம் வழங்குவதற்கு

---

* பொதுவில் வங்காளிகள் அந்தணரிலிருந்து அனைத்து இனத்தவரும் மீன் உணவு உண்ணுவதில் தடையில்லை. கணவனை இழந்தவர்களுக்கே மீன் உண்ணுவதில் தடையுள்ளது. 'ஜலபுஷ்பம்' என்று மீனை அங்கு கூறுவர்.

பொருளேதும் இல்லாமையால், அம்மா தானே வாசனை மற்றும் மளிகைப் பொருள்களை தயார் செய்து கொண்டிருந்த அதே நேரத்தில் என் பணியாளான 'கெகன்' என்பவன் மீன் மற்றும் இதர பொருட்களை எடுத்துக் கொண்டு ஆச்ரமம் வந்தார். இந்த சம்பவத்தை முன்னிட்டுதான் அம்மா 'ஜோதிஷ், என் தெய்வம்' என்று சொன்னது எனக்குத் தெளிவானது. மேலும் பிதாஜி, "யாதொரு முன்னறிமுகமில்லாத ஒருவர் மூலம் ஒரு மீனும் அத்துடன் தேவைப்பட்ட பொருட்களுடன் சரியான நேரத்தில் வந்ததும், அவற்றை அம்மாவின் பிரசாதமாக வந்திருந்த அனைத்து பக்தர்களும் பெற்றுக் கொண்டதும் இவை யாவுமே என்னை வியப்பில் ஆழ்த்தியது," என்று சொன்னார்.

மற்றொரு அடியார் அம்மாவிடம் பிரசாதமேனும் பெற்றிட வேண்டினார். ஆனால் அச்சமயத்தில் அளிக்க பொருளேது மில்லை. அப்போது நான் வீட்டிலிருந்து ஆச்ரமத்திற்காக பழங்கள் மற்றும் இனிப்பு வகைகளை அனுப்ப திடீரென்று எண்ணங்கொண்டு அவைகளை மிக்க மகிழ்ச்சியுடன் ஆள் மூலம் அனுப்பினேன். இப்பொருட்களுடன் பணியாள் அங்குச் சென்ற உடனே, அம்மா இந்த வருகைக்கு ஏற்கனவே காத்திருந்ததைப் போல் என் பணியாளுக்குத் தோற்றமளித்தார். இத்தகைய சம்பவங்கள் நவாப் தோட்டத்தில் நடந்தது ஏராளம்.

கட்டம் (6) ஓரிரவு சுமார் மூன்று மணிக்கு நான் என் படுக்கையில் விழிப்புடன் உட்கார்ந்திருந்தேன். அம்மா அப்போது வழக்கத்திற்கு மாறாக தன் தலையை எதிர் திசையில் வைத்துத் தூங்குவதை பளிச்சென்று என் உள்ளத்தில் காட்டியது. விடியற்காலையில் நான் ஆச்ரமம் போனபோது, நான் காட்சியில் கண்ட நிலையிலேயே அம்மா படுத்துத் துயிலில் இருந்தார்கள். நான் இதைப்பற்றி வினவியபோது, அம்மா விடியற்காலை மூன்று மணிக்கு எழுந்து வெளியே சென்று திரும்பியதும் தலையை திசை மாற்றிப் படுத்ததாகச் சொன்னார்கள்.

இப்படிப் பலமுறை நான் என் வீட்டிலிருந்தபோதோ அல்லது பணி செய்யும் அலுவலகத்திலிருந்தபடியோ அம்மா

தன் ஆச்ரமத்தில் என்ன செய்து கொண்டிருந்தார்களோ அதை என்னிச்சை ஏதுமின்றியும், முயற்சியின்றியும் மிகச் சாதாரணமாகவே என்னால் மிகத் தெளிவாகக் காண முடிந்தது. ஸ்ரீபுபென் (Bhupen) என்பவர் தினமும் ஆச்ரமத்திற்கு வருவது வழக்கம். அவர் வாயிலாக அங்கு அவர் கண்டதும், சுயமாக நான் கண்ட மனோமயக் காட்சிகளையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் அனேகமாக எல்லா விதத்திலும் அவைகள் ஒத்தேயிருந்தன. அம்மா, "உன் உண்மையான வீடு நவாப் தோட்டத்தில் உள்ளது. உன் சொந்த வீடென்று கருதி நீ போவது சிறிது வெளியில் உலாவுவதற்கே" என்று சொன்னார்.

கட்டம் (7) ஒருநாள் மதியம் நான் அலுவலகப் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தேன். அப்போது, 'புபென்' என்னிடம், "அம்மா உங்களை நவாப் தோட்டத்திற்கு வரும்படிச் சொன்னார். ஏற்கனவே அம்மாவிடம் எங்கள் விவசாய இலாகா இயக்குநர் தன் விடுமுறை முடிந்து இன்று அலுவலக பொறுப்பேற்கப் போகிறார் என்று நான் கூறியிருந்தேன். இதைத் தெரிவித்த என்னிடம், நீ இந்தத் தகவலை மட்டும் ஜோதிஷ்க்குக் கொண்டு போ, எது அவருக்குச் சரியெனப் படுகிறதோ அதையே செய்யட்டும்" என்று அம்மா சொன்னதாக புபென் என்னிடம் சொன்னார்.

எவ்வித தயக்கமுமின்றி நான் உடனடியாக மேஜையின்மேல் அலுவலகத் தாள்களைப் போட்டது போட்டபடியே விட்டு விட்டு, அலுவலகத்திலும் எவரிடமும் தெரிவிக்காமல் நவாப் தோட்டத்திற்குப் போனேன். அங்குச் சென்றடைந்ததும் அம்மா, "நாம் சித்தேஸ்வரி ஆச்ரமத்திற்கு போவோம்" என்று சொல்ல, அம்மா, பிதாஜி மற்றும் நான் அங்கு சென்றோம். அங்கு ஒரு பள்ளமான இடத்தில் அதாவது எங்கு தற்போது ஒரு தூண் மற்றும் ஒரு சிவலிங்கம் உள்ளதோ அந்த பள்ளத்தினுள்ளேயே அம்மா சிரித்த முகத்துடன் அமர்ந்தார். அவர் முகம் மிகவும் பிரகாசத்துடன் தெய்வீக ஆனந்தத்தை வெளிப்படுத்தியது. இந்த கண்கொள்ளாக்

காட்சியைக் கண்டு பிதாஜியிடம் நான் உரத்த குரலில் "நாம் இன்று முதல் அம்மாவை 'ஆனந்தமயி' என்றழைப்போம்," என்றேன். அதற்கு அவர் உடனே, "ஆம்! அப்படியே ஆகட்டும்," என்று கூறினார். அம்மா என்மேல் நிலைத்த பார்வையுடன் ஏதும் சொல்லாமல் இருந்தார். நாங்கள் மாலை 5.30 மணிக்குத் திரும்பும் தறுவாயில் அம்மா என்னிடம் "எப்போதும் ஆனந்தத்தில் திளைத்துப் பொங்கும் உன் முகத் தோற்றம் என்ன காரணத்தால் இப்போது மிக வாடியபடித் தோற்ற மளிக்கிறது?" என்று கேட்டதற்கு நான், வீடு திரும்பும் எண்ணம் மற்றும், முடிக்காத அலுவலக வேலைகளைப் பற்றி என்னைச் சிந்திக்க வைத்ததென்றேன். "அதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்," என்று அம்மா சொன்னார்கள். மறுநாள் நான் அலுவலகத்திற்குச் சென்றபோது இயக்குநர் முன்தினம் அலுவலகத்தில் என்னைக் காணாததைப் பற்றி ஏதும் கேட்கவில்லை. அடுத்தநாள் நேற்றைய முன்தினம் எதிர்பாராமல் என்னை அவர் ஏன் அழைத்தாரென்று அம்மாவை நான் கேட்டபோது "இச்சில மாத காலங்களில் ஆன்மீகத்தில் நீ அடைந்த முன்னேற்றம் எவ்வளவென்பதை சோதித்தேன்? மேலும், நீ வந்திருக்காவிட்டால் இந்த சரீரத்திற்கு யாரால் ஒரு பெயரிட்டிருக்க முடியும்?" என்று மிக்க அன்புடன் சிரித்துச் சொன்னார்.

கட்டம் (8) ஒரு சமயம் மேன்மை தங்கிய வங்க மாகாண ஆளுநர் டாகா வந்திருந்தார். அப்போது எங்கள் இயக்குநர் ஆளுநரைக் காண இருந்தபடியால் என்னை அத்தினம் காலை 9.30 மணிக்கே அலுவலகத்தில் ஆஜராகும்படிச் சொன்னார். அதன்படி நான் வருவதாக உறுதியளித்தேன். அடுத்த தினம் காலையில் ஆச்ரமத்திலிருந்து திரும்பிவர நேரமாகி 9.50 மணிக்குத்தான் அலுவலகத்தை அடைந்தேன். என் மேலதிகாரியை எந்த முகத்துடன் சந்திப்பேன் என்ற பயத்துடன் இருந்தேன். இப்படி இதைப்பற்றி நான் சிந்தித்திருக்கும்போது மேலதிகாரி தன் பங்களாவிலிருந்து தொலைபேசி மூலம்,

தன்னுடைய மோட்டார் வண்டி பழுதடைந்ததால் 11.00 மணிக்குத்தான் அரசு மாளிகைக்குத் தான் போவதாகவும், என்னை தொந்திரவு செய்ததற்கு தான் வருந்துவதாகவும் சொன்னார்.

கட்டம் (9) ஒருமுறை அம்மா எங்கள் வீட்டிற்கு விஜயம் செய்தபோது எங்களின் பேச்சின் போக்கில் எதிர்பாராமல் நான், “மா, உங்களைப் பொறுத்த மட்டில், உங்களுக்கு வெப்பமும், குளிரும் சமமாகவே உள்ளது. ஒரு எரிகின்ற கரித்துண்டு உங்கள் கால்மேல் விழுந்தால் அது உங்களுக்கு வலி யுணர்ச்சியைத் தராதா?” என்றேன். அதற்கு அம்மா, “சும்மா பரிட்சித்துப் பார்” என்று விடையளித்தார். இதைக் குறித்து மேல்கொண்டு நான் எதையும் வற்புறுத்தவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு எங்களுக்குள் நடந்த அந்த பேச்சின் தொடர்பை ஏற்றுக் கொண்டு அம்மா, கொழுந்து விட்டெரிந்த நிலக்கரித் துண்டு ஒன்றைத் தன் காலின்மேல் வைக்க அவ்விடத்தில் கடுமையான வலியும் எரிச்சலும் தோன்றியது. அது ஒரு புண்ணாக மாறி ஒரு மாத காலத்திற்கு ஆறவேயில்லை. என் அறிவற்ற செயலை யெண்ணி மிகவும் மனம் நொந்தேன். அம்மா ஒருநாள் தன் கால்களை நீட்டி தாழ்வாரத்தில், ஆகாயத்தை நோக்கி அசையாத பார்வையுடன் உட்கார்ந்திருந்ததைக் கண்டேன். அந்தப் புண்ணின்மேல் சீழ் படர்ந்திருந்தது. நான் அம்மாவின் பாதங்களில் பணிந்து வணங்கி, என் நாக்காலும் உதடுகளாலும் அப்புண்ணின் மேலிருந்த சீழ் கோர்வையை நக்கி உரிந்து விட்டேன். மறு தினத்திலிருந்தே அந்தப் புண் குணமாகத் துவங்கியது.

எரியும் நிலக்கரித்துண்டு தன் காலின் சதையை யெரித்த போது அவருடைய அனுபவம் எப்படி யிருந்ததென்று அம்மாவிடம் நான் கேட்டபோது அதற்கு அவர், “நான் எந்த வலியையும் உணரவில்லை. ஒரு வேடிக்கையாகக் காணப்பட்டதேயன்றி வேறொன்றுமில்லை. அமைதியுடன் தீப்பிடித்த அற்ப கரித்துண்டு என் காலின்மேல் என்ன

செய்கிறது என்று கவனித்தேன். முதலில் சில முடியும் பிறகுத் தோலும் எரியத் தொடங்கின. சுட்ட மணம் வெளியானது. கரித் தணல் தன் வேலையை முடித்த பின் தானே அணைந்து போனதும் ஒரு புண் உருவெடுத்து அது தொடர்ந்து தன் செயலை செய்து வரும்போது உன் மனதில் இப்புண் விரைவில் தணிய வேண்டும் என்னும் தீவிர எண்ணம் தோன்றிய முதலே வேகமாகக் குணமடையத் துவங்கியது" என்று சொன்னார்.

கட்டம் (10) மார்கழி மாதக் குளிர் காலத்தின் உச்சக் கட்டம். கடுமையான குளிர்க் காலத்தில், பனித்துளிர்களால் ஈரமுடைய புல் தரையில் 'ராம்னா'வின் மைதானத்தின்மீது, அம்மாவுடன் நான் காலணி அணியாமலே நடையாக போனபோது, தொலைவில் பெண்களின் கூட்டமொன்று எங்களை நோக்கி வருவதைக் கண்டேன். அவர்கள் வந்தவுடன் அம்மாவை 'ராம்னா' ஆச்ரமத்திற்கு அழைத்துச் சென்று விடுவார்களென்று நினைத்தேன். இப்படி இவ் வெண்ணங்கள் என் உள்ளத்தில் பாய்ந்தோடும்போது, ஒரு அடர்ந்த மூடுபனி அந்த மைதானத்தையே வேகமாக மூடி மறைத்ததால் அப் பெண்களையே காண முடியவில்லை. சுமார் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு நாங்கள் ஆச்ரமத்தை அடைந்தபோது, அந்தப் பெண்கள் எங்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டு, எங்களைக் காண முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியதாகத் தெரிய வந்தது. என் எண்ணங்களைப் பற்றி அம்மாவிடம் தெரிவித்தபோது அவர், "உன் சக்தி வாய்ந்த சங்கற்பம் நிறைவேறியது" என்று சொன்னார்.

கட்டம் (11) ஒருசமயம் அம்மாவின் உடல், சளி இருமலால் மிகவும் பாதிக்கப்பட்டதைக் கண்ட நான், மன உருக்கத்துடன் நடுங்கிய குரலில், "அம்மா தங்கள் உடல் விரைவில் முந்திய வலுவான நிலையை அடையட்டும்" என்று வேண்டினேன். என்னை அம்மா உற்று நோக்கி, "நாளை என் உடல்நிலை சரியாகிவிடும்," என்றார். அதுபோலவே உடல்நிலை சீரடைந்தது.

கட்டம் (12) மற்றொரு நாள் காலையில் அம்மாவின் உடல் காய்ச்சல் கொண்டதைக் கண்டேன். வீடு திரும்பி அன்றிரவு, அம்மாவுக்கு வந்த காய்ச்சல் எனக்கு வரட்டுமென்று பிரார்த்தித்தேன். காலை விடியும் நேரத்தில் எனக்கு ஜுரமும் தலைவலியும் இருந்தது. வழக்கம்போல் அன்று காலை அம்மாவிடம் நான் சென்றபோது, “நான் குணமாகிவிட்டேன், ஆனால் உனக்குக் காய்ச்சல் உள்ளது. நீ வீடு திரும்பிச் சென்று குளித்தபின் எப்போதும் போல் உணவு உட்கொள்,” என்று சொன்னார். அம்மா சொல்படி செய்தேன். என் உடல் நிலை மதியத்திற்குள் குணமடைந்தது. “தூய்மையான ஒருமைப்பட்ட எண்ணத்தின் சக்தி, எதையும் சாதிக்கும் தன்மையைப் பெறுகிறது” என்று அம்மா எப்போதும் சொல்லுவார்.

கட்டம் (13) ‘சாது ஜீவனி’ (சாதுக்களின் வாழ்க்கை) என்ற பெயர்கொண்ட புத்தகம் என் கைக்கு வந்தது. பின்வரும் வரி அதில் காணப்பட்டது. “அவர் (ஒரு சாது) தன் பக்தர்களை, ஏழைகளுக்கு நல்ல உணவு அளிக்கும்படி கூறுவார்” அந்தத் தாளின் எல்லைக் கோட்டின் ஓரத்தில் நான் பின் வருமாறு குறிப்பு எழுதினேன்: “உணவு மட்டும் அளித்து விட்டால் ஒரு மனித உள்ளத்திற்கு நிறைவு அளிப்பதில்லை.” இப்புத்தகம் அம்மாவிடம் எடுத்துச் செல்லப்பட்டு, பக்தர் ஒருவரால் நான் எழுதிய குறிப்பு படித்துக் காட்டப்பட்டது. இதற்கு அம்மா ஒன்றும் சொல்லவில்லை. சில நாட்களுக்குப் பிறகு விடியற்காலையில் நவாப் தோட்டம் சென்றேன். அதேசமயத்தில் புத்திக்கோளாறால் பாதிக்கப்பட்டவன் போல் ஒருவன் வந்து சொன்னான், “எனக்கு ஏதாவது உணவு கொடு, இல்லையேல், பசியினால் இறப்பேன்,” என்றான். அம்மா உடனே சமையல் அறையில் தேடிப் பார்த்து அந்த நேரத்தில் உண்ண எது கைக்கு அகப்பட்டதோ அதை அந்த நபருக்குக் கொடுத்தார். மேலும் அந்த நபர் குடிக்க தண்ணீர் கேட்டார். அம்மா, குடிநீர் வழங்கும்படி என்னைப் பணித்தார். அந்த ஆள் ஒரு முகம்மதியர் என்றும், மூன்று நாள் உபவாசமிருந்து ஆச்ரம வேலியின் மீதேறிக் குதித்து ஆச்ரமத்திற்குள் வந்தார் என்பதும்

எனக்குத் தெரிய வந்தது. ஒருவன், தேவைப்பட்ட ஒரு நபருக்கு உண்ண உணவும், குடிநீரும் கொடுப்பதன் மூலம், ஏற்படும் நல்ல பலன்களைப் பற்றியும் அதன் உட்பொருளையும் எனக்கு உணர்த்துவதற்கே அந்த நபர் இங்கு வந்துள்ளான் என்றும், தெய்வீகவழி பொருளாதார முறையில் குறைபாடு ஏதுமில்லாமலும், எல்லா வற்றிற்கும் ஏற்ற இடமும் காலமும் உள்ளதென்றும் அம்மா சொன்னார்.

கட்டம் (14) ஒருநாள் அம்மாவிடம் "அம்மா, இப்போதெல்லாம் என் உள்ளத்தில் மந்திர சப்தங்கள் தொடர்ந்த நீரோட்டம் போல் யெழும்பிக் கொண்டே யிருக்கிறது. பகல் நேரத்திலும் நடு இரவிலும் இந்த நாதம் இயற்கையாகவே என்னுள்ளத்திலிருந்து அதிவேகத்துடன் பீறிட்டெழுந்த நீர் ஊற்றுக்குமிழ்ப் போல் தோன்றுகிறது" என்றேன். இப்படிச் சொல்லும்போது என் உள்ளத்தில் மிகச் சிறிய அளவில் ஆணவ போதத்துடன் ஏதோ என்னால் ஒரு அலாதியான நிலையை அடைந்து என்னுள் பெருமைப்படும் என் மனப்பான்மையை கவனித்தேன். மௌனமாக அம்மா என்னைப் பார்த்தார். வீடு திரும்பியதும் அந்த மந்திர தொனி நின்றது. என் எந்த ஒரு முயற்சியாலும் அதை உயிர்ப்பிக்க முடியவில்லை. பகல் போய் இரவு வந்தது. ஆனால் அந்த ஆனந்த மயமான தொனியை மீண்டும் பெற முடியவில்லை. அடுத்த நாள் காலையில் புபெனிடம், என் அவல நிலையைப் பற்றி அம்மாவிடம் எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொண்டேன். புபென் போன வழியில் தற்செயலாக அதே வழியில் வண்டியின்மூலம் தன் பக்தர் ஒருவர் வீட்டிற்குப் போய்க் கொண்டிருந்த அம்மாவை சந்தித்து விஷயத்தைத் தெரிவித்ததில் அதைக் கேட்டு அவர் சிரித்தார். அப்போது காலை மணி பத்து. அதேசமயத்தில் என்னிலிருந்த தேக்கமான நிலையின் போக்கு மாறி முன்போல் அமைதியுற்றதைக் கண்டேன். அதே பத்து மணி அளவில்தான் புபென் அம்மாவைச் சந்தித்ததாக அவரிடமிருந்து அறிந்தேன்.

இதைப்பற்றி அம்மா குறிப்பிடுகையில், அகந்தை ஒரு தினையளவு இருப்பினும் அது ஒருவனுடைய ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக இருக்குமென்பதை அம்மா குறிப்பிட்டதை அறிந்தேன்.

கட்டம் (15) ஆன்மீக வாழ்வின் முன்னேற்றம் அம்மாவின் அன்பான தாக்கத்தின் மூலம் உடனுக்குடன் நிகழ்கிற தென்பதை, நான் மற்றொரு உதாரணத்தின் மூலம் அளிக்கின்றேன்:- நாம் இந்த அன்பான தாக்கத்தின் மதிப்பை அறிந்து கொள்ளாமல், அதை நம் ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளாதிருத்தல் மிகவும் வருந்துதற்குரியதாகும். நாம் ஆரம்பத்தில் அடைந்த உற்சாகம் தணிந்ததும் நாம் நம் பழைய வாசனைகளால் கீழான நிலைக்கே தள்ளப்படுகிறோம்.

அம்மா ஒரு முறை சிரித்தபடி சொன்னார், "நீ உன் தெய்வீக நாம ஜபத்தை அல்லது மந்திரங்களை ஜபித்துக் கொண்டே யிருந்தால் உன் மனமானது படிப்படியாக சுத்தீகரிக்கப்பட்டு, பரம் பொருளின்பால் பேரன்பும், மரியாதையும் எழும்போது உன் எண்ணங்கள் சூக்ஷ்மமும் அதிசுத்த நிலையையும் எய்துகிறது. இதனால் உயர் நிலையிலுள்ள இருப்பின் ஒரு இமைப்பொழுதான காட்சிகள் உன்னில் உதிக்க அது உன் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறது."

அம்மாவின் இவ்வார்த்தைகளைக் கேட்டதிலிருந்து நான் என் வீட்டில் ஒரு தனியான இடத்தில் மாலை பிரார்த்தனைகளுக்காக அமர்ந்தேன். திவ்ய நாம ஜபதாரை ஓட்டத்தினால் நான் ஒரு புதிய வியக்கத்தகு இன்பத்தை அனுபவித்தேன்.

எத்தடையுமின்றி ஜபத்யானம் தொடர்ந்து நடந்தது; இடையில் தூக்கம் வந்தது ஆயினும் அதிலிருந்து விழித்தபின் அந்த திவ்ய நாம ஜபதாரை தொடர்ந்து என்னைப் பரவசப்படுத்தியது. மறுதினம் என் நெருக்கமான அலுவலக வேலையின்போது இசையில் சுருதியைப்போல் தொடர்ந்து

நீடித்தது. மாலை நேரத்தில் என் மனதை தியானத்தில் செலுத்தியபோது முந்தைய நாளின் அதே நேரத்திலுண்டான ஆழ்ந்த இன்பத்தை உள்ளத்தில் அனுபவித்தேன். இதனால் தூங்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லாதிருந்தது. சில சமயங்களில் நடு இரவிலும் ஜபத்தின் வேகம் அதிகரித்ததால் சிறிதளவு இடைவேளை யிருந்தால் நலமென்று நினைப்பேன். தன் இயல்பான ஓட்டத்துடன் ஜபம் நடந்து கொண்டே இருக்கும்.

யோகாசனத்தில் கோமுகி என்னும் ஆசனத்தில் நான் எப்போதுமே உட்கார்ந்து பழகியதில்லை. ஆனால் காலை விடியுமுன் நான் அந்த ஆசனத்தில் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். இவ்வேளைகளில் மணிக்கணக்கில் என் உடலும் உள்ளமும் விவரிக்க இயலாத ஓர் இன்பக் கடலில் மூழ்கி இருந்தது. என் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஒவ்வொரு தடவையும் நான் தியானத்தில் ஈர்க்கப்பட்டு அசைவின்றி முழு நேரமும் மூழ்கிவிடுவேன்.

கட்டம் (16) ஆத்ம ஸமர்ப்பணமே என் சாதனையின் குறிக்கோளாகிய அந்தக் காலத்தில், ஒரு காலை வேளையில் நான் மௌனமாக உட்கார்ந்திருந்தேன். அம்மாவின் அருளாசியினால் என்னுள்ளமோ ஆனந்த பரவசத்தால் நிரம்பியிருந்தது. அப்போது என்னிலிருந்து ஒரு பாட்டு வங்க மொழியில் உருவெடுத்தது. (அதன் மொழிபெயர்ப்பு கீழ்வருமாறு:)

1. உன்னைப் பூஜிப்பதும், உன்னைப் போற்றிப் பாடுவதுமே, என் வாழ்வின் நிரந்தர ஆறுதலாக இருக்கட்டும்.

2. உன் மேல் எனது அன்பு மேலிடட்டும், உன் தெய்வீக அருளை நினைந்து உளமுருகி உன்னைப் பாடுவதுமாகவே என்வாழ்வு நிறைவு பெறட்டும்.

3. அம்மா, பரந்தவெளி ஆகாசத்தி லுன்னை மிக கவனமுடைய கண்களால் காண்பேன்.

4. நான் எந்த வரமும் கேட்க மாட்டேன், ஒரு சொல் கூற

மாட்டேன், ஆனந்தக் கண்ணீருடன் உன் தாளில் பணிந்து கிடப்பேன்.

5. முடிவில்லா உன் அகண்ட வெளியில் உன் புகழின் சின்னமாக, பாடல்களாகிய இந்தப் பூக்களை தூவிடுவேன்.

6. உன் பேரானந்தத்தில் நான் மூழ்கி பிரபஞ்ச முழுவதிலும் உன் புனிதமிக்க நாமங்களைப் பாடி அதை எதிரொலிக்கச் செய்வேன்.

7. என் எல்லா செயல்களும், ஆன்மீக எண்ணங்களும் உன்னை பூஜிப்பதே.

8. ஹே! தாயே, உன் பாதங்களே என் வாழ்வின் உறுதுணையான ஆதாரமாகப் பற்றி நிற்க எனக்கு பக்தியையும் நம்பிக்கையையும் அருள்வாய்.

இந்த பாடலுக்கு நான், 'ஒரு பித்தனின் பாட்டு' என்று தலைப்பிட்டு, அச்சிட்ட ஒரு பிரதியை அம்மாவுக்காக அனுப்பினேன். பிரதி அம்மாவை அடைந்தபோது, அவர் ஒரு பூசணி வகைக்காயை அரிவாள் மணையைக் கொண்டு துண்டித்துக் கொண்டிருந்தார். பாடலை பாடிக் காட்டும்போது அம்மாவின் கைகளிலிருந்து அந்தக் காய் கீழே விழுந்தது. அம்மா சிறிது நேரம் அசைவற்றிருந்தார்களென்று பின்பு எனக்குத் தெரிய வந்தது.

அம்மாவை நான் பின்னர் சந்தித்தபோது, அம்மா சொன்னார், "உலகம் ஓர் பாவனையே. உருவாக்கப்பட்ட இவ்வனைத்தும் இப்பாவனையின் தூலத் தோற்றமே. ஒருமுறையாவது உள்ளத்தில், அந்த தெய்வீக பாவனை பொங்குமானால் இச் ஜகம் அத் தெய்வீகத்தின் லீலையென்பதை உணர்வாய். அந்த தெய்வீக லீலையிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு ஒவ்வொருவரும் வாழ்க்கையின் குறிக்கோளை அடையாது இங்குமங்கும் அலைந்து தடுமாறுகின்றனர்."

சில நாட்கள் கழித்து ஸித்தேஸ்வரி ஆச்ரமத்தில் நாங்கள் எல்லோரும் உட்கார்ந்திருக்கையில் அம்மா, என்னைப் பார்த்து, "அந்த பித்தனின் பாட்டைப் பாடு" என்றார். நானோ பாடல்களைப்

பாடும் பழக்கத்தை எப்போதோ விட்டு விட்டேன். இது தவிர அங்கு பெருமளவில் மக்கள் கூடியிருந்தமையால் நான் தயக்கமுற்றேன். அம்மா சிரித்தபடியே “உன்னால்தானே அந்த ‘பித்தனின் பாட்டு’ இயற்றப்பட்டது. ஆனால் நீ இன்னும் போதிய அளவுக்கு உலகத்தார் குறை சொல்லுதலை காணாமலிருக்கும்படி பித்தன் ஆகவில்லையே,” என்று சொன்னார். இந்த வார்த்தைகள் என்னில் ஆழப்பதிந்தது. பயத்துடனும், நடுக்கத்துடனும், தடுமாறிய குரலில் பாடினேன்.

இப்படிப் பல பாடல்களை இயற்றி அம்மாவின் பாதங்களில் சமர்ப்பித்தேன். சில பாடல்களின்மேல் தன் மகிழ்வை வெளிப்படுத்துவார். சிலவற்றை மௌனமாகவே கேட்பார். பல சந்தர்ப்பங்களில் அம்மா தாகாவை விட்டு வெளியே சென்றபோது, என் மாலை நேர ஜபத்திலும், நடு இரவு நீண்ட நேர தியானத்தின்போதும், என் இதயத்திலிருந்து பாடல்கள் பொங்கி எழுவதுண்டு. அப்போது அம்மாவின் உருவம் என் முன் அசைவற்று நின்றபடி என் பரவசமான பாடல்களைக் கேட்டு மகிழ்வதை என்னால் காண முடிந்தது. அம்மா தாகாவிற்குத் திரும்பியதும் குறிப்பிட்ட சில சம்பவங்களில், என் அறையில் நான் பாடிய பாடல்களை என்னை மறுபடியும் பாடச் சொல்லுவார்.

முன்னதாக அவருக்கு அளிக்கப்படாமலேயே இருந்த பாடல்களின் பெயரிட்டு அம்மா, அவற்றை பாடச் சொல்லுவது எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

சில சமயங்களில் அம்மாவின் பக்கத்திலிருக்க வேண்டும் என்ற என் விருப்பத்தின் வேகம் என்னை பரநிலைக்கு அழைத்துச் செல்லும். இந்த நிலையில் நான் இயற்றிய பாடல்கள் ஒரே புத்தகத்தில், ‘உன் திவ்ய பாதங்களில்’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இவைகளன்றி, எண்ணிறந்த பாடல்கள், கவிதைகள், அம்மாவின் வாழ்க்கைச் சுருக்கங்கள் போன்ற இவைகளை யெல்லாம் நான் எழுதி யாவற்றையும் கிழித்து விட்டேன். இதைக் கேள்வியுற்ற அம்மா, “இப்பிறவி மட்டுமன்றி

எத்தனையோ உன் முன் பிறவிகளிலும் இம்மாதிரி எண்ணற்ற பாடல்கள் எனக்காக உன்னால் இயற்றப்பட்டு பின் நாசப்படுத்தப்பட்டது என்பதை நீ அறிய மாட்டாய். ஆயினும் ஒன்று மட்டும் தெளிவாகவும், நிச்சயமாகவும் தெரிந்து கொள். இந்தக் குப்பைக் குவியல் மூலமாக, இதுவே உன் கடைசி புவி வாழ்வு," என்று கூறினார்.

எல்லாவற்றையும் அரவணைக்கும் அம்மாவின் அன்பின் தூண்டுதலால் தெய்வீக வாழ்விற்காக பேரவா கொண்டே னென்றாலும், புலன்களோ ஆன்மீக உணர்வை நாடாமல் பக்குவமற்ற இந்திரிய சுகங்களில் நாட்டங் கொண்டன. "எந்த மனிதன் உலக சுகங்களுக்காக ஏங்கித் தன் புலன்களை நாக்கு, வயிறு மற்றும் பால் உறுப்புகளின் மூலம் இன்பத்தை நாடிச் செல்கின்றானோ அவனால் ஸ்ரீகிருஷ்ண பகவானை அறிய முடியாது," என்று ஏதோ ஒரு வைணவ நூலில் படித்துள்ளோம்.

முற்கூறிய நிலையே என்னுடையது எனலாம். ஆகவே என்னையும் என் எல்லா எண்ணங்களையும், அளவற்ற அருளும் அன்பும் கொண்ட அம்மாவின் பாதங்களில் பிணைத்துக் கொள்ள இயலவில்லை. மாயையின் கண்ணி வலையில் சிக்குண்ட ஒரு மனிதன் இறைவனின் ஸ்திரமான சாந்த நிலையில் புகலிடம் அடைவதென்பது மிகக் கடினச் செயலாகும். என் நிலைமையும் அப்படித்தான் இருந்தது.

அம்மாவிடம் நான், "உமது புனித ஸ்பரிசத்தால் ஒரு கல்லும் தங்கமாகி விடுகிறது. ஆனால் உம்முடன் பல காலம் இருந்தும் என் வாழ்வின் கதி, விபரீதமான தோல்வியை அடைந்துள்ளதென்பது நிரூபணமாகியது" என்று சொன்னேன். அதற்கு அம்மா "எது அதிக காலஞ்சென்று பக்குவமடைகிறதோ அது நீடித்த நிரந்தர பொலிவை அடைகிறது. நீ இதைப்பற்றி ஏன் அதிக கவலை படுகிறாய்? முழு நம்பிக்கையுடன் ஒரு குழந்தையைப் போல் வழி நடத்தும் தாயின் கையை உறுதியுடன் பிடித்திரு" என்று பதிலளித்தார். உள்ளத்தை தூய்மை படுத்தக்

கூடிய உற்சாகமளிக்கும் அம்மாவின் இவ்வார்த்தைகளை நான் மிகவும் ஆவலுடன் கேட்டேன். ஆயினும் ஒருவிதமான எரிச்சல் அல்லது வெறுப்புக் கொண்ட சுவாரஸ்யமில்லாத, விபரீத மனப்போக்கு என்னைத் தாக்குவதை உணர்ந்தேன். அம்மாவின் ஊடுருவிக்காணும் திறன் எப்படி என் கடின மனப் போராட்டத்தை கண் காணித்தது என்பதைக் கீழ்க்காணும் நிகழ்ச்சி தெளிவு படுத்தும்:

ஆழ்ந்த பக்தி மேலீட்டால் அம்மாவின் சந்நிதியை தினந்தோறும் நாடிச் செல்ல ஆரம்பித்தேன். இதைக் கண்டு சிலர் இழிவாகத் தூற்ற ஆரம்பித்தனர். ஆதலினால் ஒரு சாதாரண மனிதன் ஆன்மீக முன்னேற்றத்திற்காக பிறரை நாடுவது ஒரு பொதுவான மனிதக் குறைபாடுதானோ என்று சந்தேகப்பட ஆரம்பித்தேன். பிறரின் கண்டனங்களும் என்னை சந்தேகத்திற்கு ஆளாக்கியது.

இவ்வாறு பிறரது அவதூறுகளால் தாக்குண்ட நான் மனம் நொந்து அம்மாவிடம் செல்வதை நிறுத்திக் கொண்டேன். அறிவுபூர்வமாக என்னை மேம்படுத்திக் கொள்ள எண்ணங் கொண்டேன். ஏழெட்டு நாட்கள் யோக வாசிஷ்ட மென்னும் நூலை ஊன்றிப் படிக்க ஆரம்பித்தேன். ஒருநாள் மதியம் என் வீட்டில் ஓய்விலிருந்த போது, என்னை பாபு காளி குமார் முகர்ஜி என்ற வயதான பிராமணர் ஐந்தே நிமிடம் என்னை பேட்டி காண வேண்டுமென்று வந்திருக்கிறார் என்று என் பணியாள் சொன்னான். நான் அவரைச் சந்தித்தபோது, தான் என் நண்பர்களாகிய ஸ்ரீநிரஞ்சன் ராய் மற்றும் டாக்டர் சஷாங்க் மோகன் முகர்ஜி* ஆகியோரைக் காணச் சென்றதாகவும், அவர்களைக் காணாமையால் என்னைத் தொந்திரவு செய்ய வந்திருப்பதாகவும் கூறி, “தாங்கள் ஸ்ரீஆனந்தமயிமா அவர்களின் ஒரு சிறந்த பக்தரென்று கேள்வியுற்றேன். அம்மா

* இவர் பிற்காலத்தில் ஸ்ரீஅகண்டானந்த கிரி மஹராஜ் என்று அழைக்கப்பட்டார்.

எப்படிப்பட்டவர், அன்னாரின் அலாதியான குணாதிசயங்கள் என்ன வென்பதை தயவு செய்து எனக்குச் சொல்ல முடியுமா?" என்று கேட்டார். இவ்வார்த்தைகளினால் பேச்சற்று நான் கண்களில் நீர்வடிய உட்கார்ந்தேன். வந்தவர் "என் கேள்விக்கு ஒரு விடையை நான் பெற்றேன். ஆனால் உங்கள் கண்களில் கண்ணீர் ஏன் வடிகிறதென்பதை தயவு செய்து சொல்லவும்," என்று வேண்டினார்.

"நான் சில நாட்களாக மற்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தேன். மேலும் நானோ அம்மாவைப் பற்றிய சிந்தனைகளையும் ஒதுக்கிவிட்டு இருக்கும்போது, நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்து அம்மாவைப் பற்றி என்னிடம் விசாரிக்க வந்துள்ளீர். இதைக் காணும்போது அவமானத்துடன் என் தலையைத் தாழ்த்த வேண்டியுள்ளது. அம்மாவின் செயல் முறைகள் எவ்வளவு விசித்திரமாயுள்ளது! அம்மாதான் சரியான நேரத்தில் என்னை என் சுய விழிப்புணர்விற்குக் கொண்டுவர வேண்டி உங்களை என்னிடம் அனுப்பி வைத்துள்ளார். இதற்காக உண்மையில் உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்," என்று கூறினேன்.

அந்தப் பெரியவர், "தயவு செய்து என்னை அம்மாவிடம் அழைத்துச் செல்லுங்கள்," என்றார். அவர் அம்மாவை தரிசித்த பின் "பல வருடங்களுக்கு முன்பே நானும் என் தாயை இழந்தேன். இன்று அம்மாவை தரிசித்த உடனே, என் தாயின் இழப்பைப் பற்றிய வருத்தம் என்னை விட்டு முழுமையாக மறைந்தது," என்று சொன்னார்.

என் உள்ளத்தின் போராட்டங்களை அம்மாவிடம் சொல்லி அவர் பாதங்களில் விழுந்து அழுதேன். அவரோ சிரிப்புடன், "இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரை வலுக்கட்டாயப் படுத்தி ஒரு குறிப்பிட்ட பாதையில் செலுத்தா விட்டால் அவரால் முன்னேறவே இயலாது" என்றார்.

**மாத்ரு தரிசன நூல் அறிமுகம் முற்றிற்று.**

# பதிப்புரை

ஸ்ரீஸ்ரீ மா ஆனந்தமயி அவர்களின் வாழ்க்கை வரலாறு அல்லது அவர் வாய்மொழிகள் அடங்கிய புத்தகம் நம் நாட்டு பல மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் நூலாக வெளிவருவது ஆன்மீகத்தை பின்பற்றும் எவ்வினத்தார்க்கும், எம்மார்க்கத்தவர்க்கும் பயனளிக்குமாதலால், இது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

திருவண்ணாமலையில் ஸ்ரீபகவான் ரமண மஹரிஷிகள் அருளிய வழியில் வாழும் சுவாமிகளை நான் நன்கு அறிவேன். அவர் கோல்கத்தாவில் வாழ்ந்த காலத்தில் ஸ்ரீஸ்ரீ மா அவர்களின் ஆன்மீக வழிமுறைகளில் ஆழ்ந்த ஆர்வம் காட்டினார்.

ஆங்கிலத்தில் முன் வெளியான "Mother as revealed to me" எனும் நூலை தற்போது தமிழில் முதல்முதலாக '**மாத்ரு தரிசனம்**' எனும் தலைப்பில் சுவாமிகள் சில ஸ்ரீரமண பக்தர்களின் ஒத்துழைப்பைக் கொண்டு மொழி பெயர்த்துள்ளார். மிகவும் உயரிய பூரண ஆன்மீக நிலையெய்திய ஸ்ரீஸ்ரீ மா அவர்களை வெளிப்படுத்தும் '**மாத்ரு தரிசனம்**' எனும் நூலைப் படித்து ஆன்மீக பெருவாழ்வை பின்பற்றி தமிழ் மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்று நம்புகின்றேன். (இறைபணியாகச் செய்தமையால் சுவாமிகள் அறிமுகமற்று இருக்க விரும்புகிறார்.)

தமிழ் மொழியில் '**மாத்ரு தரிசனம்**' கொணர்ந்தமைக்கு சுவாமிகளுக்கும், அவருடன் ஒத்துழைத்தோருக்கும் மற்றும் எழுதிய நூலை கணினி தட்டச்சு செய்து உதவிய ஸ்ரீரமணாச்ரம தலைவர் ஸ்ரீ வே.சு. ரமணன் அவர்களுக்கும் என் உள்ள நிறைவை வெளிப்படுத்துகிறேன்.

ஓம். ஓம். ஓம்.

சுவாமி பாஸ்கரானந்தா
ஸ்ரீஸ்ரீ ஆனந்தமயி ஆச்ரமம்.

# பொருளடக்கம்


I. முன்னுரை .......... iii

II. ஸ்ரீஸ்ரீ ஆனந்தமயி - ஓர் சரிதச் சுருக்கம் .......... vii

III. நூல் அறிமுகம் .......... xiv

IV. பதிப்புரை .......... xli

V. பொருளடக்கம் .......... xlii

1. மந்திர சக்தி .......... 1

2. சிந்தனா சக்தி .......... 11

3. யோக சக்தி .......... 25

4. சமாதி நிலை .......... 42

5. அம்மாவும் அவர் லீலைகளும் .......... 54

6. ஆச்ரமம் .......... 101

7. புதிய வாழ்வின் பாதையில் .......... 120

8. தூரப் பிரதேசங்களுக்கு .......... 138

9. ஸ்ரீஸ்ரீமா .......... 142